உ

# பிரபந்த பஞ்சகம்



5507
R65

பாலகவி

30/3

உ
சிவமயம்
பாலறுவாயர் துணை

# பிரபந்த பஞ்சகம்.

5507
R65

*ஆசிரியர்:-*
தேவகோட்டை
தருமபுர ஆதீன வித்துவான்
திருவண்ணுமலை ஆதீன விரிவுரையரசு
மதுரை ஆதீனச் சித்தாந்த சைவ வித்தகர்
சித்தாந்தப் புலவர் மாமணி
***பாலகவி, வயிநாகரம்***
**வே. இராமநாதன் செட்டியார்**

அச்சிட்டது:-
செட்டிநாடு அச்சகம்
தேவகோட்டை
1956

முதற்பதிப்பு: 1956

1. ஞானசம்பந்தருலா [விசு]
2. குன்றுதோருடல்வெண்பா [சித்திரபாநு]
3. ஞானசம்பந்தர்ஒருபாவொருபஃது [சுபாநு]
4. பழமுதிர்சோலைப்பதிற்றுப்பத்தந்தாதி [தாரண]
5. ஞானபுரீசுவரசுவாமி பதிகம் [சித்திரபாநு]

முன்னைய நான்கும், 27, 28, 29, 30-ம் ஆண்டு நிறைவு
களுக்கறிகுறியாகவும் ஐந்தாவது நூல் தருமை
ஆதீனக் குருபூசை விழாவிலும்
இயற்றப்பெற்றன.

30/3

# ஆசியுரை.

மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ திருவருள் தவயோக சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்:-

"பல்லூழிகாலம் பயின்று அரனை அர்ச்சித்தால், நல்லறிவு சற்றே நகும்" என்பது ஆன்றோர் திருவாக்கு. முன்னைப் பிறவிகளிற் செய்த சிவபூசைப் பேற்றினால் உண்டாகும் அறிவால் அடையத்தக்க பயன் ஆண்டவன் திருவடிப் பேற்றுக்கு ஆளாவதேயாம்.

மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் இன்றியமையாது சிந்திக்க வேண்டிய சிந்தனைகளில் தலையாயது, எதிர்காலத்தைப் பற்றியதாகும். நாளை வர இருக்கிற துன்பத்தையோ, இன்பத்தையோ எண்ணிப் பார்த்துச் செய்வன செய்ய முயலாதவன், மனிதரிற் பதராவான். "எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை. அதிர வருவதோர் நோய்" என்பார் திருவள்ளுவர்.

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறுதற் பொருட்டேயாம். கடவுளை மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணங்களாலும் வணங்குதல் வேண்டும். அதனாலேயே சைவநூல்கள் பாவனை மந்திரம், கிரியை ஆகியவற்றாற் சடங்குகளைச் செய்தல் வேண்டுமெனக் கூறின.

ஆண்டவனை மனத்தால் நினைந்து வாயால் வாழ்த்திக் காயத்தால் வழிபாடு செய்தல்முறை. "வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை" என்பது திருமுறை. செந்தமிழ்ப் பாடல்களில் இறைவனுக்கு விருப்பம் அதிகம். "பாட்டுக்கு உருகும்

தமிழ்ச் சொக்கநாதர்'' என்பார் குமரகுருபர அடிகள்.

நமது ஆதீனச் சித்தாந்த சைவவித்தகர் பாலகவி இராமநாதன் செட்டியார் அவர்கள் இளமைதொட்டு வளமையான செய்யுட்களை யாக்கும்ஆற்றலை இறைவன் திருவருளாற்பெற் றுள்ளவர்கள். பொன்மலருக்குநாற்றம்கொடுத் தாற்போல அவர்களது செய்யுள் யாக்கும் திற மையைப்பல்லாண்டுகளாக இறைவன்பொருட்டு அவர்கள் பயன்படுத்தி வருவது அனைவருமறிந் ததேயாகும்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னே அவர்கள் செய்து வைத்திருந்த "ஞானசம்பந்த ருலா'' "குன்றுதோராடல் வெண்பா", "ஞான சம்பந்தர் ஒருபா வொருபஃது'', "பழமுதிர் சோலைப் பதிற்றுப் பத்தந்தாதி", "ஞானபுரீசு வர சுவாமி பதிகம்'' என்னும் நூல்கள், இப் பொழுது அச்சுவாகனமேறி வெளி வருகின் றன. சைவத் தெய்வத் திருமுறைகளையும், மெய் கண்ட நூல்களையும் ஆழ்ந்து கற்ற அறிவி லும், ஆண்டவனிடத்து வைத்த இடையறாத அன்பினுலும் இப்பிரபந்த பஞ்சகப் பாடல்க ளைத் திருமுறையாசிரியர்கள் - சந்தான குரவர் களின் நினைவு நீங்காதிருக்கத்தக்க நிலையில் ஆக்கியளித்துள்ளார்கள்.

நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தப் பெருமானை யும் சரவண மருவும் தண்டமிழ் முருகனையும் பாடிப்பரவும் பாலகவி, இவைபோன்றசாத்திர- தோத்திரக் கருத்துக்களமைந்த தமிழ்நூல்கள் பலவற்றை வழங்கி எல்லா நலங்களும் எய்தி இன்புற்று வாழ அங்கயற்கண்ணி பங்கனும் எம் ஆலவாயண்ணலின் திருவடிகளைப் பிரார்த் தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

30/3

உ
சிவமயம்

# சாற்றுக் கவிகள்

தேவகோட்டை, தமிழ்ப்புலவர், சித்தாந்தப்பாவலர் திரு,
கரு. ராம, சோம, இராமநாதன் செட்டியாரவர்கள்:-

உலகினிற் சிறந்த கலைக்களஞ் சியமா
யுறைபவன் சைவசித் தாந்த
மிலகுறு நெறிநின் றெம்மனோர்க் கதனை
யினிதுபோ தித்துள மகிழ்ந்து
நிலவிய சமய விசேடநிர் வாண
நிகழ்தரு தீக்கைகள் பெற்றுக்
குலவுநல் லன்பி னற்சிவ பூசை
குறைவறச் செய்துணுங் குணத்தான்

2

அத்திறத் துடன்பே ரவைகளிற் சொற்க
ளமுதவா ரிதியெனப் பொழிந்தே
யெத்திறத் தாரு மொப்பியேத் துவக்கு
மிசையுளான் மூப்பிலா தினிய
நித்திய மான பாக்களை யியற்று
நேர்மையா லறிஞர்க ளாய்க்து
வித்தகன் பால கவியெனச் சீர்ப்பேர்
விளங்கிட நல்கவாழ் மேலோன்

3

மேலவன் ராம நாதனெ னண்பன்
மெய்ப்புகழ்ப் பாலரு வாயர்

பாலுள நீங்காப் பண்பினு லவற்கும்
பன்னிரு நயனவே ளினுக்கும்
ஞாலம துய்யப் பாமல ரணிந்தான்
ஞானசம் பந்தருக் குலாவும்
வேலவன் றனக்குக் குன்றுதோ ருடல்
விளங்குவெண் பாவுமுள் ளன்பாய்

4

ஓங்கிடுங் காழிக் கவுணியற் கொருபா
வொருபதும் பழமுதிர் சோலைப்
பாங்குறு பதிற்றுப் பத்துஞ்சேர்த் தருமைப்
பண்ணவர் ஞானபு ரீசர்
தேங்கிய புகழ்ப்பாப் பதிகமு மாக்கிச்
சிறந்தவிப் பனுவலேந் திணேயு
மீங்குள மக்கள் படித்துய வொன்று
யிசைப்பிர பந்தபஞ் சகமாய்

5

தந்தன னேங்கும் பசுந்தமிழ் மலரே
சார்ந்தகற் செய்திகள் பலவே
யுந்துறுஞ் செட்டி நாடித ழுதனே
யோங்கிட நடத்துமா சானுய்ச்
சந்ததந் தருமம் புரவயி நாகரத்
தார்குடி சிறந்தினி தோங்க
வந்தவிப் புகழான் வாழிய வூழி
வளமிக நிறைந்துமா நிலத்தே

தேவகோட்டை திரு, கி. கரு- ராம.
**சாமிநாதன் செட்டியாரவர்கள்:**

மணியுடன் முத்தொளிர் வையையும் பொருநையு
மணிபெறத் திகழ்ந்துசா லறம்பல பெருக்கிப்
பார்புகழ்ந் தேத்தும் பாண்டிநன் னுட்டி

லேர்மிகு செல்வ ரெந்தன வணிகர்
நண்ணும் பதிகள் தொண் ணூற் ருறனுள்
கோநக ரென்னும் வானகர் தன்னின்
மகாதே வரவென வாழ்முரு கப்பன்
இன்றவத் துதித்தோ னிசைமிகுந் தோங்கு
மொன்பான் கோயிலி லொன்ருய் விளங்கும்
பிள்ளையார் பட்டிப் பெருமர புடையோன்
அமரா வதிபுதூ ரார்ந்தினி துறைவோர்
மதுரைப் பதிநிகழ் மாண்புறு சொக்கர்க்
கிதமுறப் பணிபல வியற்றிய பெரியோர்
வயிநா காத்தார் வழிக்குடி விளங்கப்
பிள்ளையாய் வந்த பெருங்குண நல்லோன்
தேவ கோட்டைத் திருநகர் வாழ்வோன்
நாமகள் பூமக ளுட்டமிக் குள்ளோன்
இலக்கண விலக்கியத் தெல்லை கண்டவன்
சமய நூலிற் சார்பொரு ளுணர்ந்தோன்
சைவ சாத்திரத் தண்கடல் குளித்தோன்
பன்னூ லாய்ந்து பரந்த வறிவினன்
ஏல வார்குழ லிமயவள் பாகத்து
நீலமா மிடற்று நிமலனர் பூசை
சாலவே தினம்புரி சாந்த சொரூபன்
தருமையா தீனத் தனிப்பெரும் புலவன்
மேடைப் பேச்சின் மேதகும் வித்தகன்
பேச்சின் றிறத்தைப் பேணி நடப்பவன்
பாலரூ வாயர்தாள் பதித்த சிந்தையன்
பால கவியெனப் பலரும் போற்று
மிராம நாதனு மெனக்குறு நண்பன்
செட்டிநா டிதழின் சிறப்புறு மாசான்
உலகின ரேத்தி யுயர்ந்து நிலைபெறச்
சொற்சுவை பொருட்சுவை தூயபல் சுவையுடன்
விருத்த கவிகளும் வியப்புற மேன்மைக்
குன்றுதோ ருடுங் குமாநா யகர்க்கு

வெண்பா நூறு விதியினிற் பாடியும்
ஞான புரீச நற்றிருப் பதிகமும்
காழியிற் றோன்றிய கவுணியற் கொருபா
வொருபஃ தொடனுய ருலாவும் பாடியும்
பழமுதிர் சோலைப் பரம குருவுக்குப்
பதிற்றுப் பத்துப் பாங்குடன் பாடியும்
பிரபந்த பஞ்சகம் பீடுற நல்கினன்
வாழ்க வன்னவன் மகிழ்வுடன்
ஊழிபல் லூழி யுலகினி லினிதே.

தேவகோட்டை நகரத்தார்உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர், வலையபட்டி, வித்துவான் வே. **அண்ணுமலை அவர்கள்:-**

மக்கள்குலமுன்மொழியாய்மாநிலத்தில்தோன்மையதாய்
மிக்கபுகழ்பெற்றுமிளிர் மேன்மைத் தமிழ்மொழியில்
பாலப் பருவமுதற் பாப்புனைந்த செந்நாவால்
குன்றுதோ றாடுங் குமரன் றிருவடியை
நின்று நிதமேத்தும் நேயமிகு வெண்பாவும்
மூன்று வயதினிலே முத்தமிழிற் பாடலிசைத்
தான்ற புகழ்படைத்த அண்ணல்சீர் காழியராம்
பால்மணக்கும் வாயர்க்குப் பாமணக்கும் வண்ணம்
உலாவோடு நல்ல ஒருபா வொருபஃதும்
கற்பவர்தம் உள்ளங் கனிந்து சிறக்கப்
பழமுதிருஞ் சோலையினைப் பாடுந் தமிழ்நூலும்
ஞான புரீசற்கோர் நற்பதிகச் செந்தமிழும்
பாடி நமக்களித்த பாவலவன் யாரென்னில்
கேட்டாரும் வேட்டமுறக் கேளாரும் கேட்கவா
ஒட்டாக் குணப்பொருள்கள் ஒற்றுமையாய் நிற்கச்
செவிகுளிரச் சொல்லாட்சி செய்கின்ற பால
கவிராம நாதனவன் காண்.

மதுரை உயர்தர வழக்குரைஞர் திரு,

**என். ஆர். கிருஷ்ணசாமி அய்யங்கார்அவர்கள்**

*போனகந் தேவி புனிதப் பாலுண்*
*ஞானசம் பந்தர் நல்லுலா வொன்றும்*
*குன்றுதோ ருடும் குமரக் குரிசிற்*
*கென்று முளவரு ளெழிலும் விளங்க*
*இன்றுணை யாகமக் கெடுத்துரை வெண்பா*
*வொன்றுநா ருக வுள்ளநன் னூலும்*
*ஞானசம் பந்தர் நல்லருள் மல்க*
*ஒருபா வொருபஃ துயரிய நூலும்*
*பழமுதிர் சோலைப் பரனடி யிணையைப்*
*பாடிப் பரவும் பதிற்றுப் பத்தும்*
*ஞான புரீசர் நாளும் நம்மவர்க்*
*கானபே றனைத்தும் அருளும் பதிகமும்*
*ஆகிய வைந்துநா லமைவுற வளித்தனன்*
*பாகியல் மொழியான் பால கவிப்பெயர்*
*யோகியர் செல்வன் ஒண்டமிழ்க் கவிஞன்*
*நாகிளங் கன்றை நயந்தூட்டு மாறே.*

மதுரை ஆதீன மகா வித்துவான், அருண்மொழியரசு

**திருமுருக கிருபானந்தவாரியாரவர்கள்:-**

*அஞ்சகமி லாப்புசலி யந்தணற்குங் கந்தனுக்கும்*
*பஞ்சகநூல் பைந்தமிழாற் பாடினன்-வஞ்சகமில்*
*தேவை நகர்வாழ் திருவாளன் பாலகவி*
*தாவில்சீர் ராமநா தன்.*

இராமநாதபுரம் அரசிளங்குமாரர் திரு,

**ஆர். காசிநாத துரையவர்கள்**

*சரபந்தன் பேரருள் கூட்டிட வோருமெய் யன்பர்*
*[தம்மைப்*
*பரபந்தங் கட்டப் பிரபஞ்ச பாசப் பசாசுவிடப்*

*பிரபந்த பஞ்சகச் செந்தமிழ்த் தேனைப் பிரியமுடன்*
*தரவந்த பால கவிக்குநம் நாடு சலாஞ்சொலுமே*

பள்ளத்தூர் அருணுசலம் செட்டியார் உயர்நிலைப் பள்ளித்
தமிழாசிரியர் பண்டித மு.
**முத்துவேங்கடாசலமையரவர்கள்:-**

*வேத ஞானசம் பந்த னுரிசை*
*மிக்கி லங்கு மூலாவுடன்*
*வேல னுருயர் குன்று தோறமர்ந்*
*தாடல் வென்றிவெண் பாக்களும்*
*போத ஞானமி சைந்த செம்மலின்*
*பொய்யி லோர்பா வொருபதும்*
*பொங்கு பழமுதிர் சோலை மாவளம்*
*பேரற்றி சைக்குமந் தாதியும்*
*நாத ஞானபு ரீசர் மேற்பதி*
*கப்ர பந்தமு நல்கினன்*
*நாடு போற்றிடு சைவ மாண்பினை*
*நன்ன ரோதுநா வீறுளோன்*
*ஏத மற்றிடு செந்த மிழ்க்கடல்*
*மூழ்கி முத்தையெ டுப்பவ*
*னேந்தல் பால கவிப்பெ யர்கொளி*
*ராம நாதநன் னுவனே.*

கருவூர் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான்
**அ. கணபதிஐயா அவர்கள்:-**

*சிவபுரத்துச் சிவஞானச் செம்மல்மகி*
*மூலாவொன்று சீர்மை மிக்கு*
*விரவுபுகழ்த் தீந்தமிழால் விளம்பினன்*
*பன்னூலும் விளங்க வாய்ந்த*

வரகவியின் னுரைமணிநல் வயிநாக
மத்தோன்றல் வளங்கொள் தேவை
உரவலிசேர் பாலகவி உயர்ராம
நாதனெனு மொளிமிக் கோனே

ஒன்று முளத்தா ருளமறிந்து பேரருள்செய்
குன்றுதோ ருடுங் குமரன்றுட்-கின்றுரைத்தான்
வெண்பா வொருநூறு வோராம நாதனுயர்
நண்பரய பாலகவி நன்கு.

ஞான புரீசர்க்கு நற்றமிழி லோர்பதிகத்
தேனி லமிர்தத்திற் செப்பினுன்-வானளவும்
நற்புகழ் சேர்வயி நாகரத்தோன் பாலகவி
சற்குணன்வே ராமநா தன்.

சிவமயம்

# முன்னுரை.

தேவகோட்டை சன்மார்க்க சங்கத்தலைவர்
"வைத்தியமணி"
சித. வே. ஷண்முகநாதபிள்ளை அவர்கள்:-

பாலருவாயர் திருவருள் நலம்பெற்று, இளமை யிலேயே செய்யுள் யாக்கும் திறமும் சிவநேசச் செல்வமும் படைத்து, அல்லும் பகலும் ஆத்திக வளர்ச்சி கருதிச் சிந்தித்துத் தொண்டுசெய்யும் செய லுடையவர்களும் சிவநெறிச் செல்வர்கள் சித்தாந்தப் புலவர்மாமணி என்று புகழும் உயர்தகுதியுடையவர் களும் ஆகிய மெய்யன்பர் பாலகவி வயினாகரம் வே. இராமநாதன் செட்டியாரவர்கள் இளமைக் கால மாகிய பள்ளிப்பருவம் தொடங்கித் தமது ஒவ்வொரு ஆண்டு நிறைவுதோறும் ஒவ்வொரு தோத்திரப் பனுவல் செய்து வருவது அனைவரும் அறிந்ததே. அன்பர் பாலகவி அவர்கள் தமிழ்மணமும் தெய்வீக மணமும் சித்தாந்த சாத்திரக் கருத்துக்களும் நிறைந்துள்ள இப் பிரபந்தபஞ்சக நூலை யாத்து வெளியிட்டமைக்கு ஆத்திகவுலகம் என்றும் நன்றியுடையதாயிருக்கும்.

உ
சிவமயம்
பாலறாவாயர் துணை

# ஞானசம்பந்தருலா.

காப்பு:

ஞானசம் பந்தர் நலமா ருலாப்பகர
ஞானசம் பந்த நலமருளும்—ஞானசம்பு
பெற்ற களிற்றுமுகப் பிள்ளையுங் காழியினிற்
கொற்றமிகு சேயுங் குளிர்ந்து.

நூல்.

காவிரிநீர் பாய்ந்து கழனி வளம்பெருகப்
பாவிரிசெந் நாவலர்கள் பாராட்டித்-தாவிரிசெய்
2
இந்தமிழாற் பாவினங்கள் செப்பப் பெறுவளவ
வேந்த ரரசுபுரி மேனாட்டிற்-பூந்தாது
3
சேர்ந்தணைந்த வண்டர் திருநீற்றுத் தொண்டரெனச்
சார்ந்து சிவநெறியே சால்புடைத்துக்-கூர்ந்தவிருட்
4
கண்டனேதெய்வமவன்கண்டிகையைவெண்ணீற்றை
மண்டுபுக ழைந்தெழுத்தை மாந்தரெலாங்-கொண்டு
5 [நலம்
சாருவீ ரென்றுபறை சாற்றுவது போலொலிசெய்
தாருசேர் தண்பொழில்கள் சார்தரா-மேருவாங்

கொங்கைமட மாதர் குளிர்காலே நீராடிச்
செங்கையினிற் பொன்வளைகள் சேர்க்தொலிப்பத்
7 [—தங்களுளங்
கொள்ளையிட்டோர் பாலூடல் கொள்ளும் பொழுதவர்
தெள்ளு மணிமுடிமேற் சேர்க்குமடி-வள்ளமுலைக்[ தங்
8
காற்று திடையிறுமென் றூர்ப்பதுபோற் காற்சிலம்பு
சாற்று வரற்றத் தளிர்க்கரத்துக்—கூற்றுவான்
9
சாவ வுதைத்தருளே சார்தோணி யப்பரிட
மேவு திருநிலையா மின்னனையாள்-பூவியலும்
10
பாதங்க ளேத்தும் பரிவுடனே கையுறைக
ளேதங்க ணீங்க வெடுத்தமலன்-கிதங்கள்
11
செப்பலே செவ்வாயுஞ் சீர்நாவும் பெற்றபய
னெப்பிலோ மார்க்குமென வுள்ளுவகைத்-துப்புடனே
12
பையரவம் பூண்ட பரம னகமகிழ
மையறுதே வாரதிரு வாசகத்தை-வையமுளோர்
13
யாழோ குழலோ விசைக்கருவி யின்னொன்றோ
ஏழா மிசையிவர்பா லின்பமுறச்-சூழோசை
14
பற்பலவா நின்றுநலம் பாலிப்ப தோவென்று
பொற்புடனே போற்றப் புனிதவா-யற்புமிகுக்
15
தோரதத் திருவீதி யுற்று வலம்வந்து
நாதனமர் பொற்கோயி லண்ணிமுனோர்-போதநெறி
16
நின்று வழிபாடு நேர்ந்து நலங்கனெலா
நன்றடைய வாழ்வுபெறு நன்னகர-மன்றுணட

மாடும் பெருமா னடிமலரிற் சேருநெறி
நாடி விளக்குமுயர் ஞான நூல்-வீடன்றி
18
யிம்மையிலுஞ் செல்வ மெளிதிற் பெறுமுறையைச்
செம்மையுறக் கூறுந் திருமுறையும்-வெம்மைதவிர்
19
சாத்திரமு மோதித் தகுதி பெறுமாந்தர் [பத்
நாத்திறத்தாற் கிள்ளையொடு நாகணவாய்-தோத்திரிப்
20
தீய விலங்குகளுஞ் சேணிற் பறவைகளு
நாயகனைச் சிந்திக்கு நன்னகரந்—தாயகமாய்
21
வந்த விருந்தை மகிழ வினிதூட்டி
முந்து விருந்துவர முன்னோக்குஞ்-சிந்தையினி
22
லில்லறத்தைக்கைக்கொண்டோரியாரும்பழிமொழியா
நல்லறத்தை மேற்கொண்டு நண்ணினோர்-பல்லறங்கள்
23
போற்றி வளர்த்துப் பொலியுமறச் சாலைகளை
நாற்றிசையுந் தோற்றுவித்த நாகரிகர்-ஏற்றமுடன்
24
மன்னு திருநகர மங்கை யுடனாவோன் [னகரம்
பொன்னின் மலையினிற்போற் போந்தருள்செய்-தொன்
25
வேணுபுரங் கொச்சைவயம் வெங்குருநீர்த் தண்புறவந்
தோணிபுரம் பூந்தராய் தொல்புகலி-மாணிறைந்த
26
சண்பை பிரமபுரஞ் சாருங் கழுமலநற்
பண்பேய் சிரபுரநீள் பையரவ-ரொண்காழி
27
பன்னிரண்டு பேர்கொள் பதிசெய் தவத்துவந்தான்
முன்னம் பிறவிதொறு முக்கணனைப்-பன்னியவன்

சித்தாந்த சைவத் திருநெறியி னின்றொழுகுஞ்
சத்தா மறையவர்க டங்குலத்துப்-பித்தாவான்
29
பாத மனத்திருத்தும் பண்புடைமை காட்டுசிவ
பாத விதயனெனும் பட்டத்தா-னேதமில்சீர்க்
30
கற்பின் மனைவாழ்க்கைக் காதற் பகவதியோ
டற்புமிகு மில்லறத்தை யாற்றுநாள்-வெற்புடையான்
31
பூதிபொாளிர் சாதனங்கள் பூதலத்துப் போற்றல்பெறு
தாதி யருள்மறப்பித் தாழ்குழிக்கே-போதுநெறி
32
காட்டு சமண்முதலாக் கண்டபல பொய்மதங்க
ளூட்டிற் புகுந்து நலங்கெடுப்ப-வீட்டுநெறி
33
வையம் பெறுகவெனும் வான்சமயங் கொண்டொழுகு
மையன் வருந்தி யவர்க்கிரங்கி-யையகோ
34
வெண்ணிலி பாவிக ளெம்மிறை யீசனை
நண்ணா றியாம னழுவுவதோ-மண்ணுலக
35
மீசனடி கூட்டு மினிய வுலகமன்றோ
மாசு புரிமதங்கள் மாயவொரு-தேசுநிறை
36
மங்கல மேய மனைமாட்சி மாண்புசெயு
நன்கல நன்மகவு நானடையக்-கங்கையணி
37
வேணியா யாறுமுக வேளைப் பயந்தவெங்கள்
தோணியர யோர்குழவி துன்பமற-வாணிலவு
38
பாற்கடலை யீந்த பரம வருளுகெனச்
சேற்கட் பகவதியாஞ் செந்திருவோ-டேற்கவிறை

வேண்டுவார் வேண்டுவதே யீதல் விளக்கமன்றோ
பூண்டயங்கு மின்னிடையாள் பொன்னுதாங்-காண்
[டகுசீர்
40
வாய்ந்து பரன்மகிழ மன்னுதிரு வாதிரைநாள்
ஆய்ந்த சிவசமய வன்புநெறி-யேய்ந்துயரத்
41
தென்னாடு பன்னாளாச் செய்த தவப்பயனே
முன்னாகி வந்ததென மூவுலகும்-பன்னாகின்
42
றேத்த வவதரித்த தின்பக் குழவியொன்று
பூத்த திருவருள்சேர் புண்ணியர்கள்-கூத்தனடி
43
சிந்தை யிருத்தித் திகழ்சடங்கு முற்றுவித்தார்
வந்த வருட்குழவி மண்ணுலகிற்-பந்தமறுத்
44
தாளுடையான் பாதத் தணைவிப்ப தாதலா
லாளுடைய பிள்ளையா ராயினார்-நாளும்
45
இறையுணர்வே கொண்ட விளங்குழவி மூன்று
நிறையும் பிராயத்து நெற்றிப்-பொறிநயனத்
46
தீச னருள்விளக்க மெய்த நமருய்யப்
பாசம் பறித்துப் பயனளிக்கும்-வாசமலர்
47
மன்னு திருநிலைய மங்கை திருமுன்னர்த்
தன்னுவமை யில்லாத் தனிநீரிற்-சென்னிமுழுக்
48
காடச் சிவபாத அண்ணலார் போம்பொழுது
கூடத் தொடர்ந்து குறுகடையிட்-டோடிவரத்
49
தந்தையா ருன்செய்கை சாரு மிதுவென்னில்
வந்திடா யென்றழைத்து வாவியடைந்-தந்திவணங்

காட்டுங் கதிரைக் கரையி லிருத்தியிரு
ளோட்டும் புனல்புக்கா ரொண்குழவி-காட்டமலர்
51
கையாற் பிசைந்து கடவுட் டிருத்தோணி
மெய்யாஞ் சிகரத்தை மேனோக்கிப்-பொய்யாத
52
செம்மை மணிவாய் திகழ்மழலை யின்மொழியா
லம்மேயப் பாவென் றழைத்தருளி-விம்மி
53
யழுதருள யாவருக்கு மம்மையப்ப ராவோர்
தொழுதகைய மங்கைத் துணையோ-டெழுதகவின்
54
வெள்ளை விடையேறி மென்குழவி தன்னையடைந்
துள்ள மகிழு முமையேயுன்-வள்ளமுலை
55
யூறிப் பொழிபாலை யூட்டென்னத் தாயணைந்
தேறிப் பொலியு மிருதனத்து-மீறிவரு
56
மின்னமுதைப் பொற்கிண்ணத் திட்டுச் சிவஞானந்
தன்னைக் குழைத்துத் தளிர்க்காத்து-முன்னளித்துக்
57
கண்ணீர் துடைத்தருளக் கண்ட சிவக்கொழுந்து
தெண்ணீர்மை யுற்ற சிவஞான-நண்ணீர
58
ராகித் திருஞான சம்பந்த ராயினர்
போகிச் சிவத்தினருட் பொற்பறிந்த-யோகச்
59
சிவபாத வள்ளலார் செய்கடன்க ளாற்றித்
தவமாங் குழவியினைச் சார்ந்தி-கெவருனக்குப்
60 [டோச்ச
பாலளித்தார் காட்டென்று பைங்கிளைகைக் கொண்
நூலடுத்த கேள்வி நுவல்குழவி-மேலெடுத்த

செங்கை விரற்சுட்டிச் செம்மைபெறுந் தோடுடைய
மங்கலமா மின்பதிகம் வாயிசைத்து—நங்கையொரு

62
பங்க னிவனன்றே பாலளித்து வாழ்வளித்தா
னெங்கள் பெருமா னெனமொழிந்தார்-பொங்கியுளம்

63
பூரித்த தந்தை பொன்போற் புதல்வரைமுன்
வாரித் தழுவி மகிழ்ந்தெடுத்துப்-பாரித்த

64
தோளி லணைத்துச் சுகத்தின் வரம்புகண்டார்
வேளிற் பொலியழகர் வேணுபுரத்-தாளுடையான்

65
பாதம் வணங்கும் பரிவுடனே பூங்கோயில்
போதத் திருத்தாதைப் பூசாருங்-காதலொடு

66
பின்றொடர்ந்தார் தெய்வப் பிரம புரத்துறையுங்
கொன்றைச் சடையனன்பர் கூடியெதிர்-சென்றுசிவ

67
ஞானக் களிற்றி னறுமலர்ச்செந் தாள்பணிந்தார்
வானக் கதிரனையார் மங்கையுடன்-மோனத்த

68
ராய பெருமா னடியிணையில் வீழ்ந்திறைஞ்சிக்
கோயிற் புறத்துக் குறுகினர்—தூயமறைத்

69
தாதையார் தெய்வத் தமிழ்ப்புயலைத் தோளிருத்தி
மேதையாக் தொண்டர்புடை மேவிவரப்-பேதையார்

70
ஈன்ற பொழுதிற் பெரிதுவக்க வேகியொளி
கான்றமணி மாடத்துக் கந்தருவர்-தேன்றதும்பும்

71
பூமாரி பெய்து புகழ வணைந்திருந்தார்
தீமாயை யோட்டிச் சிவமருளு-மாமதலை

கோலக்காப் பெம்மான் குளிரடிகள் சார்ந்திறைஞ்சி
நா னு மறையறியா நாயகனைச்-சா னுமிசை
73
சேருமடை யில்வாளைச் சீர்ப்பதிகம் பாடுங்காற்
சாருஞ் சிறிய தளிர்க்கரத்தாற்-சீரொலிசெய்
74
தேத்தச் சிவபெருமா னின்னருளா லஞ்செழுத்துப்
பூத்துப் பொலிவுமிகு பொற்றாள-மூத்ததமிழ்
75
வள்ளலார் கைத்தலத்து வந்தணையப் பெற்றிறைவன்
உள்ள முவக்துறையு மூர்கடொழக்-கொள்ளுநசை
76
மிக்குப் பலபதிகள் மேவிச் சிவம்பாவித்
தக்க கழுமலத்துச் சார்ந்திருந்தா-ரக்கமணி
77
யீசன் மகிழு மெழிலெருக்கத் தம்புலியூர்
வாசர் பெரும்பாணர் மன் னுமிசை-நேசமுளார்
78
நீலகண்ட ரில்வாழ்வு நீடத் தவம்புரிந்த
சீல முடையா டிருவனையாள்—கோல
79
மதங்கசூ ளாமணியா மங்கை யுடனே
யிதங்க ளருள்குழவி யின்பப்-பதங்களில்வீழ்ந்
80
தன்போ டிசைக்கு மருட்பதிக மியாழிலமைத்
தின்போ டிசைத்தங் கினிதுறைந்தார்-பின்போர்நெல்
81
வாயி லாத்துறையில் மன் னு பரன்வணங்கக்
கோயில் புகுங்காற் குறைதவிர்ப்பார்-மேயதிருத்
82
தாதையார் தோளிறங்கித் தன்சீ ரடிகடையிட்
டாதியார் பொற்பாதத் தாதரவிற்-போ துவார்

பஞ்சை மலரைவென்ற பாதங்க ளேவுநடை
நஞ்சின் மிடறுடைய நம்பெருமா—னஞ்சிமணி
84
முத்துச் சிவிகைகுடை மெய்த்தபுகழ்க் காளமுதிர்
சித்தர்க் களிக்கத் திருவாளர்—பத்திமிகுந்
85
தஞ்செழுத்தை யோதி யகில வுலகமுய்ய
மிஞ்சுபுகழ் மேவவதில் வீற்றிருந்தார்-செஞ்சடையார்
86
அன்பன் திருப்பாச்சி லாச்சிரா மத்துறைவான்
மன்புகழான் கொல்லி மழவனென்பான்-தன்புதல்வி
87
வாட்டு முயலகனேய் மாற்றிச்செங் குன்றடைந்து
நாட்டுச் சுரநோயெந் நாளுமுறு-தோட்டியுயர்
88
பட்டீச் சுரத்துமுத்துப் பந்த ரிறைதரப்பெற்
றெட்டாத செல்வ மினிதருள்வார்-மட்டறுசீர்க்
89
கோகழி சேர்ந்து குலவுதந்தை வேள்விக்கு
மாகிழியொன் றுயிரம்பொன் மன்னியது-நாகமணி
90
பெம்மான் றிருவருளாற் பெற்றுத் தருமபுரத்[கொள்
தம்மானுக் கியாழ்முரிப்பண் ணார்வித்துக்-கைம்மான்
91
தேவர் திருமருகல் சேர்த்தோர் வணிகமகன்
மேவு மரவு விடத்தினும்-சாவவொரு
92
பற்றின்றி நஞ்சுண்டான் பைங்கழலே சாற்றிநின்ற
கற்றைக் குழலாள் கடிமணங்கொண்-டெற்றைக்கும்
93
வாழக் கொடுமரவால் வந்த விடந்தவிர்த்து
வீழிப் பதியில் விளங்கியருள்-சூழத்தன்

மாசில் படிக்காசு வாயிற் படிவைக்க
வாசிதவிர் பாடல் வழங்கியிறை-பேசுமறைக்
95
காட்டிலுயர் கோயிற் கதவு திருமறையாற்
பூட்டி யிருக்கப் பொருவிலிசை-நாட்டுதிரு
96
நாவரசர் தன்பதிக நற்றிறவு கோலிட்டுத்
தேவர் கதவு திறந்துவிடப்-பாவரசர்
97
மூடும் படிபா மொழிந்து மதுரைவந்து
கூடு நினைவுகொண்டு கோளறுத்துப்-பீடுசெயு
98
மொப்பில் பதிக முரைத்துப் புறப்பட்டுச்
செப்புந் திருமதுரை சேர்ந்திருந்தார்-துப்பறியாப்
99
பொய்யமணர் தம்மடத்துப் போக்கு பெருநெருப்பைப்
பைய வடைந்துசமண் பஞ்சவனின்-மெய்யுறைத்து
100
வெப்புநோ யாக விளம்பி வளவர்மகள்
தப்பில் தவத்தாற் சமண்டவிர்க்கா-வப்பெரிய
101
நோயைவெண் ணீற்றா ளெடியி லகற்றியனல்
மேய திருவேடு வேவாமல்-பாய்புனலில்
102
இட்டதிரு வேடெதிரே யேற வருள்புரிந்து
முட்டுரைத்து வாழமண மூர்க்கரெலா-மெட்டுள்
103
கழுவேறக் கண்டுகன்னிக் காவலன்கூன் போக்கி
மழுவேய் திருக்கரத்து வள்ளல்-செழுமலர்த்தாள்
104
நாடு சிவசமய நன்னெறியைத் தாபித்துப்
பீடருளு ஞானப் பெருந்தகையார்-நீடு

திருக்கொள்ளம் பூதூரைச் சேருதற்கு முள்ளிப்
பெருக்கிற் றிருப்பதிகம் பேசி-மருக்கமழும்
106
பாடலே கோலாகப் படகை யினிதோட்டி
யாடல் புரிவா னடிதொழுது-வீடருள்வார்
107
போதிமங்கை மேயுறைந்த புத்தநந்தி சென்னியிடி
மோதி யிறந்தொழிய முன்னின்று-தீதகற்று
108
மோத்தூரி னன்ப ருவகை யடையுகிலே
பூத்தோர்ந்த பாடல் புகன்றுயர்ந்து-மூத்தேய்ந்த
109
ஆண்பனைகள் பெண்பனைக ளாக வருள்புரிந்து
மாண்புகலி மன்னர் மயிலையினிற்-பூண்பாவை
110
செல்வ வணிகர் சிவநேசர் பெற்றெடுத்து
மல்லலருட் பாலரு வாயருக்கே-நல்குவனென்
111
றன்பின் வளர்க்க வமரு மடமயிலாள் [பொற்
முன்பலர்கொய் போதரவு மோதிவிட-என்பினைப்
112
பாண்டத்தி லிட்டுவைத்துப் பாலரு வாயரிரு
காண்டற் கினிய கழல்பணிய-வேண்டுவதை
113
முற்றுவிக்கு ஞான முதல்வர் சிவம்பரவி
நற்றமிழிற் பாடல் நவின்றிறந்த-பொற்றொடியாள்
114
மன்னுமுயிர் பெற்றுவர வாழ்த்திப் பெருமணத்துத்
தன்னை யுவமையிலாச் சங்கரனை-முன்னியுறை
115
நம்பாண்டார் நம்பி நயந்து பெறவளரும்
கொம்பாம் பெருமாட்டி கோலமணஞ்-சம்பாய

வீச னருளா லிசைந்து மணங்காண
மூசுதிருத் தொண்டருக்கு முத்திதந்து-வாசமலர்க்
117
காதலியின் கைப்பற்றிக் காணுமெழிற் சோதிகலந்
தோதுஞ் சிவத்தை யுறுவிப்பார்-போதநெறி
118
பேணுஞ் சிவசமயப் பேரா சிரியருக்குள்
மாணுந் தலைமை வளருவார்-காணுந்
119
திருமுறையின் மூன்றருளுஞ் செம்மலார் ஞான
மருவு கவுணியரா மன்னர்-பருவமென்றுஞ்
120
செல்வப் பதினாறு சேர்ந்தொளிர்வார் செம்மைநிறை
மல்லற் றமிழ்விரகர் வாதுசெய்த-பொல்லாத
121
பாழ்மதங்க ளோட்டும் பரசமய கோளரி
வாழ்வை யெனக்களித்த வள்ளலார்-ரேழ்பிறவி
122
நீக்கி நமையாளு நின்மலனூர் மாநிலத்தோரை
வீக்கு தளையின் விடுவிக்கு-நோக்கமொடு
123
புண்ணியஞ்செ யன்பர் புகுந்து வணங்குபொழு
தெண்ணவுயர் பள்ளி யெழுச்சியிசைத்-துண்
124 [ணொகிழப்
போற்றும் பொழுது புலவர் தமிழமுத
ஆற்றிற் குளிக்க வுயர்பொழுது-காற்றக்
125
கமல மலர்பொழுது காய்கதிரோன் றோன்று
சமய மறிவிக்குந் தன்போ-தமைவுண்ட
126
புள்ளினங்கள் சேக்கையெழும் போதிற் புதுமலர்ச்
பள்ளி யெழுந்து பனிநீரி-லள்ளுமெழில் [செம்

மேனி முழுகி விளங்கு திருமுடியில்
நானிலமும் போற்று நலங்கெழுமு-வான்வயிரம் 128
பச்சை சிவப்பு பவளங்கோ மேதகம்
மெச்சு தரளம் வியனீல-மிச்சைதரு 129
பூராகந் தூய்மை பொலிவால வாயமெனும்
பேரார் நவமணிகள் பிள்ளையிணை-நேரார 130
எத்தனை யூழி யிருந்துதவ மாற்றினவோ
வத்தனையும் சேர்ந்த வணிமுடியை-நித்தனுயர் 131
சென்னி யிருத்தித் திகழ்குஞ் சியைமறைத்துப்
பொன்னனைய நெற்றியில்வெண் பூதியணிந்-துன்ன 132
நலம்பெருக்கும் தென்பொதிய நற்சாந்தின் பொட்டு
மலங்கெடுக்கு மம்மையருள் மன்னி-யிலங்குவது 133
காட்டுதல்போற் செம்பொடியின் காமர் திலதமுமிட்
டோட்டு மெழுபரியா ரோரிருவர்-வேட்டணைந்த 134
தென்னவிரு காதணிக ளிட்டுக் களத்திறைவன்
மன்னு நயன மணிமாலை-பொன்னொளிருங் 135
கண்ட சரமகரி காழ்த்த மணிப்பதக்கம்
வெண்டரள மாலை மிகவணிந்து-தண்டமிழைச் 136
சாரு மிசைக்கிசையத் தாளமிடுங் கைகளினி
லாருங் கடக மணிந்தரையில்—சேருமரை 137
ஞாணசைத்துக் காலிலணி நாட்டித் திருமேனி
மாணு மணமறிய வாசமிகக்-காணலர்கள்

காட்டி யுயர்ந்துவரக் காம ரிசைவாணர்
காட்டுதொனி தோல்மிடறு நற்கஞ்சம்-கூட்டுங்
161
கருவி யொலிபரப்பக் கந்தருவ ராதி
திருவமைந்த பல்கோடி தேவர்-இருடியர்கள்
162
சூழ்ந்துவர நான்மறையோர் தூய மறைபகர
ஆழ்ந்த பிறவி யருங்கடலில்-வீழ்ந்தவரைப்
163
பேரின்ப மாகும் பெரிய துறைசேர்க்கு
நீரி னிகராறுத்து நீடுபுகழ்-சாருதமிழ்
164
வேதமுறை யோத விரியுமல ராத்தியின்கீழ்
காத லுருமணலர் ஞட்டிநிகழ்—போதநெறி
165
ஆவின் மடிபொழிபா லாட்டிப் பெரும்பதவி
மேவு பெருமானும் வேடுவர்தங்-கோவாகிக்
166
காளத்தி ஈசனுக்காக் கண்ணிடந்த கோமானும்
ஆளத் திகழும் அரநெறியில்-காளத்துக்
167
கண்ட னுக்கு நீர்விளக்குக் காட்டு பெருந்தகையும்
விண்டடவு மாடம் விரிகோயில்-மண்டுபுகழ்
168
மேவ வமைத்தசெங்கண் வேந்தர் பெருமானுந்
தேவன் புகலூர்ச் சிவனுக்குப்-பூவமைந்த
169
மாலை தொடுத்தளித்த வள்ளல் முருகருஞ்செய்
மேலைத் தவத்து விளைபயனுச்-சேலைத்தன்
170 [றெடுப்ப
கண்கொண்ட வெண்காட்டுக் காரிகையார் பெற்
விண்கொண்ட கீர்த்தி மிகுசேயைப்-பெண்கொண்ட

பெம்மா னுவந்தவொரு பிள்ளை யெனக்கறிசெய்
தம்மா னுக் கிட்ட வருந்தவருஞ்-செம்மாந்த
172
மாமறையோர் சாத்தமங்கை வாழ்நீல நக்கருஞ்
சேமம் பெருகரசு செய்தென்னர்—மாமரபின்
173
வந்தபழி தீர்த்த வளவர் திருமகளுஞ்
சிந்தை மகிழநிமிர் தென்னவ னு-மந்திரியா
174
மண்ணல் குலச்சிறையு மாரு மிசைவன்மை
நண் ணு பெரும்பாண நற்றவரு-மெண்ணமேலா
175
மம்மையப்பர் பாலிருத்தி யாயிழைபொற் றாலிபெற்று
வெம்மைப் பசிதவிர்க்க மேவுசெங்கெல்-கைம்மருங்கு
176
வாங்கிவரச் சென்றெதிரே வந்தமணக் குங்குலிய
மீங்கெம் பெருமாற் கியைந்ததென—மாங்கிலிய
177
மாற்றிப்பெற் றீசன் மலரடியைப் பெற்றபுகழ்த்
தோற்றத் திருக்கடவூர்த் தொல்லோ னு-நீற்றறையை
178
யீசனெக் தந்தை யிணையடியி னீழலென
நேச முடனுறைந்து நீடுநஞ்சு-வாசமிடு
179
மன்னமுண்டு வெந்தறுக ணானை வலங்கொண்டு
தன்னைப் பிணித்தகல்லே சார்புணையா—மன்னிவா
180
வாழிக் கரையணைந்த வப்பர் பெருமானும்
காழிற் பொலியூர்தி காதலித்துச்-சூழத்
181
திருநீற்றுத் தொண்டர் திசையடைந்து மேவத்
தருநாற்ற விண் ணுலகிற் சார்ந்தோர்-பெருநாற்றப்

பூவின் மழைபொழியப் பொறப்பார் சிவஞான
தேவன் மறுகிற் சிறந்துவந்தான் -தேவுலக
குழாங்கள்
மங்கையரும் விஞ்சையர்த மங்கையருங் கின்னாரின்
மங்கையருங் கந்தருவ மங்கையருந்-தங்குபுகழ்
184
நாகத் திருநாட்டு நங்கையரும் பூவுலகின்
மேகத் திருண்டகுழல் மின்னுரு-மாகத்தை
185
வில்லோனின் சேனை யெதிர்ந்த தெனவிசையில்
வல்லோன் மலர்க்கரத்து வள்ளப்பா-லொல்லையுண
186
வெண்ணி யணைந்த வெகினங்க ளென்னநந்தி [வந்த
பண்ணு மொலியைமுகிற் பாட்டொலியென்-றெண்ணி
187
தோகை யினமென்னத் தூய தமிழ்மூன்று
மோகை யொடுபயில வுன்னிமிகு-வாகையுடன்
188
கிள்ளைபல போந்தவெனக் கேட்கன்ற வுள்ளத்தைக்
கொள்ளைகொடுத் தங்கே குறுகுவார்-பிள்ளையெழிற்
189
றேனையிரு கண்வண்டாற் சேரப் பருகுவார்
வானை யளந்துயர்ந்த வாகுவைப்பார்த்-தானையொத்த
190
கொங்கையிணை நோக்கிக் குழைவார் மயல்மிகுந்து
செங்கைவளை பாதத்திற் சேர்த்தணிவார்-அங்கணியும்
191
பாடகங்கை சேர்ப்பார் பதக்க மிடைக்கிடுவார்
கூடும் விரிசிகையைக் கொண்டுகள-நாடிவைப்பார்
192
வேட்ட விசைமுருக வேளே யிவனென்பார்
காட்டத் தருளூ கலமுறுவல்-காட்டுமணிச்

செவ்வாயுங் கண்டு சிறிது மனமகிழ்வா
ரெவ்வா றினைஞ் னெமதுளத்தை-யிவ்வாகத்

194

துள்ளே புகுந்துகவர்ந் தோடினு னென்றுரைப்பார்
கொள்ளை மயற்பெருக்காற் கொங்கையிணை-யுள்

195 [ளெழுந்து

விம்மிப் புடைத்துவர மின்ன லிடைக்கிரங்கி
அம்மைக் குழலி லணிமலர்கள்-செம்மைநுதல்

196

வைத்த திலத மணிக்கழுத்தி லாபரண
மித்தனையு நீக்கி யிடருறுவார்-முத்துமிகு

197 [தென்னே

பொன்னும் விழிகளுக்கும் பூண்முலைக்குந் தந்த
யென்ன விரங்குவா ரெங்களிலோர்-கன்னிமுனுள்

198

வேண்டப் பொடியிட்டு வெப்பந் தவிர்த்தனையாம்
ஈண்டிப் படிவெப்பந் தின்னலுறத்-தூண்டுபொடி

199

யிட்டா யிதுநன்றோ வென்றுரைப்பார் பல்கலையு
நட்டா யினியுமெங்க ணற்கலைமேற்-பட்டாசை

200

கொண்டு நெகிழ்த்தல் குணமோ வெனவுரைப்பார்
வண்டிரண்டை யுன்பாலே வைத்துவிட்டோ-

201 [மொண்டியெங்கை

வந்து சரணடைந்த வண்டுகளைக் கொள்ளையிட
முந்தமுல கன்றென்று மோகமொடு-சந்தவளை

202

காப்பார்போற் காந்தட் காக்குவிப்பார் காமவெள்ள
மீப்பாய்ந் தலமருவோ மேலெழும்பக்-காப்பாய

203

காவா யுதவி நலமருள்வா யென்றிரப்பார்
சேவாய் மடந்தையர்க்குச் சேர்ந்ததுணை-பாவாய

னீயன்றி யாருளார் நீடு புகழ்மானி
ஆய வணிக ரறமகளிர்-தூயபுகழ்க்
205
கொல்லிமழ வன்புதல்வி கோது தவிர்த்தொளிர
நல்ல வருளளித்த நாயகனே-யொல்லையினி
206
லெங்கள் விருப்பிற் கிணங்கி நலந்தருவாய்
பொங்கு மதனகலைப் பொற்பறிய-வெங்கள்
207
உடல்தழுவ வேண்டு முடன்வருவா யென்பார்
தடமுலையை யோவியங்கள் சாரும்-படமாகக்
208
கொண்டுபல வோவியங்கள் கூட்டிச் சுகமுறலாம்
தொண்டுசெய்வோம் வாவென்று சொல்லுவார்-கண்டு
209
தேனுங் கசப்பதெனச் செப்பச் சுவைமிகுந்து
வானும் பெறுது வளரமுதம்-மானமருங்
210
கண்ணுள் தருஞானங் காதலித்த பொன்வாயிற்
பெண்ணுங்க ளூட்டுவோம் பேதையர்கள்-கண்ணுள
211
துன்பக் கடலிற் றுடிக்கின்ற யாங்களெலா
மின்பக் கடலி லிளைப்பாற-அன்புவைத்து
212
வந்தா தரித்தருள்வாய் மாதேவி வான்கருணைச்
சிந்தா மணியென்று செப்புவார் -கொந்தார்ந்த

**பேதை**

பேதை யொருத்தியின்பப் பெண்மை நலங்கொடுத்தற்
கேதும் பெறுத விளக்கரும்பு-தாதணையா
214
மெல்லரும்பு பின்பெல்லா மேவுபகை யாகவரும்
வல்ல மதியையுடன் வந்தாடச்-சொல்லுவாள்

தன்பெருமை தானறியாத் தத்துவன்போற் பெண்ணார
தன்பெருமை தானறியாச் சாம்புகத-மன்பாகத் [சாம்

216

தாயோடு தந்தையொக்கல் சார்ந்தழைக்க வார்ந்திடு
ஆயே மணியே அழகுருவே-தூய [வாள்

217

பவளமே முத்தே பசும்பொனே யென்றங்
கெவரினிமை பேசுகினு மேதி-லவர்போல

218

நோக்குவாள் செவ்வாய் நுவல்மழலை கிள்ளைக்கு
மாங்கிப் பயில்விப்பா ளாதரவில்-வீக்குபொலங்

219

கச்சிற் றனத்தைக் கருதியிரு செப்பென்று
நச்சிப் பெதும்பையர்பா னண்ணியென-இச்சை

220

விளையாட்டுக் காகுமென வேண்டுவாள் சோற்றை
அளையாட்டப் பாவைவா யப்பிக்-களியாட்டங்

221

கொள்ளுவா ளாரூரான் கொண்ட மணம்போல
அள்ளி முடித்து மமைதிபெறுக்-கள்ளமலர்க்

222

கூந்தலா ளாடவரைக் கொள்ளை கொளுநோக்கம்
போக்கிடா துற்ற பொலம்விழியா-ளாந்தனுவின்

223

போக்கு வரவு புகலு முளையெயிற்றுள்
மீக்கொ ளிசைக்குழலை வீணையினை-நோக்கிநகை

224

செய்யு மிளமழலைச் செவ்வாயாள் பெண்ணுருவுற்
றுய்யுமென்பு பாண்டத் தொளித்ததுபோ-லையனுயர்

225 [போல்

அஞ்செழுத்தில் வேதமுத லாகமங்கள் தொக்கது
செஞ்சடையிற் கங்கையொளி சேர்த்திபோ-னெஞ்சி

[லொளி

கொங்கையாள் வாயிற் குளிர்நீர் வழிந்தழகு
தங்குமணி மார்பினுள் சார்ந்தகதிர்-பொங்கொளியிற்
227
றோன்று நிழலைத்துத் தூய மனைபுகுந்தங்
கேன்றவது காணு திடருறுவாள்-கான்றவொளி
228
யாடியெதிர் நின்றங்கே யார்ந்த வுருவத்தை
ஏடியெவ்வா றிங்கே யெதிர்ந்தனையென்-றோடிவந்து
229
சண்டை யிடுவாள் சமய நெறிபாவுந் [டடவு
தொண்டரைக் கண்டாற் றொழுதெழுவாள்-விண்
230
மாமதியின் வெண்கதிரை வள்ளத்தி லேந்திமிது
சேமமிகு பாலென்று செப்புவாள்-சாமவொலித்
231 [கள்
தண்டை பதத்தணிந்தாள் தன்னருமைத் தோழியர்
மண்டுபல ரோடு மறுகினிலே-யொண்டாளனு
232
செப்பிலிட்டுச் சோறென்று செல்வச் சிறுமியர்க்கு
மொப்பரிய கிள்ளைக்கு மூட்டுங்கால்-வெப்பகற்றும்
233
வேந்தன் தமிழ்விரகன் வீடு தரும்பெரியான்
போந்தின் றருள்செய்தான் போற்றுமினென்-றூந்
234 [தகவிற்
காள மொலிசெய்யக் கண்டு தனதன்னை
மூளுமன்பாற் கும்பிடவு முன்விழுந்து-தாள்பாவி
235
முத்துச் சிவிகை முதல்வன் றிருக்கரத்துச்
சித்திதரு பொன்வள்ளஞ் சென்றுபெற்-றித்தருணந்
236
தாரா யெனவனைமுன் றனை பிடித்தழுதாள்
வாரா யெனமகளை மார்பிலணைத்-தாராத

காதலொடு முத்தமிட்டுக் கைக்கொண் டகஞ்சென்
ஈதனன் றென்று மிரத்தனன்ரே -மாதரசி [ருள்

பெதும்பை

பீடார் பெதும்பைப் பிராயத்தா ளெப்பொழுதும்
வாடாத மல்லிகையின் வாசமெழ-ஏடவிழா
239
தார்ந்து முதிர்ந்துபல வாடவராம் வண்டுகணின்
ரோர்ந்து மலர்பெரழுதை யுன்னியெதிர்-சார்ந்துசுற்று
240
மெல்லரும்பு வரனவர்பான் மேவாக் கடைபடா
நல்லமுதம் பானீர் நயந்தெடுக்கும்—வல்லதொழில்
241
கற்காத வன்னம் கடவு டிருக்கரத்து
நிற்காத மான்கன்று நீடுமதன்—மற்காணும்
242
வீரப் புயங்கிடவா மென்கரும்பு கூண்டடைத்து
வாரா மொழிபயிற்ற வண்கிள்ளை-காரமருங்
243
காக்கையடை காவாக் களகண்டங் காதலிக்க
மீக்கொள் தகுதி மிகவாய்ந்து-நோக்கணங்கு
244
இந்துங் கதிரு மினிதுவந்து பேரொளியைத்
தந்திடி னு மாறுத் தனியிருள்போற்-கொந்தலர்கொள்
245
கூந்தலா ளாடவரைக் கொல்லுந் தொழில்பயிலு
நீந்து கடலனைய நீள்விழியா-ளேந்துகிளி
246
தன்மழலை கொள்ளத் தனிக்குழலி னல்லிசையை
யின்மொழியாக் கொண்ட வெழிலினள்-நன்மகன்பாற்
247
கோலக்கா வீசன் கொடுத்ததிருத் தாளம்போற்
சாலத் தழைகமுகின் றண்காய்போற்-கால

முருகின் கனிபோல் முனிவர்கடங் கையிற்
பொருவில் சிவலிங்கம் போல-உருவின்

249

விடவரவு புற்றிருந்து மேலே யெழும்ப
முடியெடுத்தல் போல முலையாள்-துடியடுத்த

250

மின்னிடையாள் ஒண்கருப்பு வில்லா னிளம்பருவக்
தன்னி லுவந்ததேர்த் தட்டனைய-பொன்னல்குல்

251

பெற்றாள் தளர்நடையைப் பேதையருக் கிந்தழகு
வற்று மடநடையை மன்னினாள்-முற்றாத

252

தோழியர்கள் பல்லோர் தொடர மணிமாடத்
தேழிசைகொள் வீணை யெடுத்தெங்கள்-காழியர்

253 [கோன்

கூறு திருப்பதிகம் கோமூத் திரிமாலை
மாறு பதிகம் வளத்தேழு-கூறிருக்கை

254

தாளச் சதியமகஞ் சாரேக பாதமுறு
கோலை யறுக்குங் குலப்பதிகம்-ஆளுமிசை

255

யாழ்மூரி பாசுர மென்னு மிவைபாடி
வாழ்பொழுதை வாழ்பொழுதா மன்னுவித்துத்-தாழ்

256 [சடையாள்

நின்ற பொழுதிசையி னீடுபல வாச்சியங்கள்
மன்று மகிழ்வோன் மகன்வரவை-நன்றுணர்த்த

257

மாடத் திழிந்து மறுகடைந்து வானவனைக்
கூடப் பெரிதாவல் கொண்டுசிந்தை-யோடியவன்

258

பாலொளித்த தன்மையாற் பண்டை யுணர்விழந்து
மாலொளித்தபொன் னுடலம்வாடினாள் -மேலொருத்தி

5507
R65
KOVILOOR
MADALAYAM
மடாலயம்

மங்கை

மங்கைப் பருவ மகிழ்ந்து வரப்பெற்றாள்
நங்கையர்க்கு நாயகமா நண்ணினாள்-பொங்கி
260

மதுப்பொழிந்து நாற்றிசையும் வாசம் பரப்பிப்
புதுப்பொலிவு பெற்றிருந்தும் பொன்செய்-மதுக்குலங்
261 [கள்

மூசாத நண்போது முன்கோவா நன்முத்து
வீசாத தென்றல் வியனுடல்-மாசாய
262

வம்புலியு மேத்து மரிய மணிவிளக்கு
உம்பர் சசியு மொருவெள்ளைக்-கொம்புமவள்
263

மாமியுங் கண்டு மகிழும் வடிவுடையாள்
சாமி களத்துத் தனிவிடமு-ஞமமிகத்
264

தோன்று கிளிபோலச் சுற்று கருங்குழலா
ளான்ற பரம னடிவிழுந்த-மூன்றுகலை
265

வெள்ளை மதியாம் வியனுதலாள் விற்புருவம்
வள்ளை மலர்க்காது வாய்த்துயர்ந்தாள்—தெள்ளுதிறல்
266

ஆடவர்க்கு மையனே யாக்கி யதுதவிர்ப்பா
னீடு மருந்துதரு நீள்விழியா-ளாடியெனக்
267

காட்டுங் கபோலத்தாள் காவிற் குமிழ்மூக்காள்
வாட்டந் தவிர்க்கு மலைமங்கை-வேட்டவிரு
268

செந்தா மரைக்காத்தாற் செம்மை பெறவருடு
மைந்தா விறைவன் மலரடிபோற்-பைந்தாதிற்
269

செம்பாத்தை யென்னத் திகழு மிதழுடையாள்
கொம்படுத்த முல்லைக் குறுநகையாள்-நம்பாற்கு

மூவர் சொலுந்தமிழ்போல் முற்று சுவைமொழியாள்
தேவ னுதித்த திகிரியென-மேவுமிரு
271
தோளினு ளுந்திச் சுழியின் முளைத்தெழுந்து
நீளு முரோம நிமிர்பசுந்தா—ளாளுமிரு
272
செங்கமல மென்னத் திகழ்ந்து பணைத்தெழுந்த
கொங்கையாள் மின்னற் கொடியிடையாள்-வெங்க
273
ணரவு படமெடுத்த வல்குலாள் காமன்
விரவு கலையறிந்த மின்னாள்-இரவெழுந்து
274
சோலை புகுந்தருமைத் தோழியர்க ளோடங்கண்
சால வளர்த்த தளவுமிக-வாலிதொரு
275
மெல்லரும்பு காட்ட விரைந்தணைந்து கண்டுமகிழ்ந்
தெல்லவரும் வம்மி னிதைக்காண்மி-னல்லவிக்காள்
276 [கோன்
போற்றுவோ மென்றுநிற்பப் பொற்பார் புகலியர்
காற்றிசையும் போற்ற நயந்தெதிர்ந்தான்-தோற்ற
277 [மொடு
சென்றாள் கரங்குவித்தாள் சிந்தை யுணர்விழந்து
நின்று ளரையாடை நீங்கினாள்-குன்றுத
278
கொங்கை பசப்படைந்தாள் கோல்வளைக ணீங்கினு
டங்கையரைத் தாயர் தமைமறந்தா-ணங்கை
279
யுலகாலர் தூற்ற வொருப்பட்டாள் சோறு
விலகி யிருக்க விதித்தாள்-கலகமிடுங்
280
கண்பஞ் சடைந்தாள் கழிகாம நோய்மிகுந்தாள்
மண்பாவித் தோழமையில் மன்னினாள் -பண்பாவு

மடந்தை
செந்தமிழின் தெய்வநலஞ் சேர்ந்த திருமடந்தை
சந்தமறை வல்லோன் சமைத்தொருகாற்-றந்தமையால்
282
உற்றமக ளென்றுமனத் தோராது மையல்கொளும்
பெற்றி யமைந்தவெழிற் பெண்ணனையாள்-கொற்றத்
283
திருவைந் தெழுத்தறியார் சிந்தையிருள் போல
மருவு குழலாள் மனத்து-வருநிறைவாற்
284
சிந்தை மகிழ்ந்துயர்ந்த செல்வர் திருமுகம்போல்
முந்து மொளியின் முகிழ்முகத்தாள்-வந்தொருநாள்
285
வேலை பரந்து விரிநீர் குடித்தவடி
வேலை யனைய விடவிழியாள்-சோலைமலர்த்
286
தேனைக் கரும்பைத் தெவிட்டா வமுதத்தைச்
சீனியைக் கற்கண்டைத் தீம்பாகை-யானசுவை
287
ஊட்டி வளர்த்த வுயர்மொழியா ளாடவரை
வாட்டி வதைக்குமென மாமுகத்தி-னூட்டமறை
288
கச்சு முகபடத்தைக் கட்டித் தாளவட
முச்சி யமைந்த வொருதொடக்கை-மெச்சு
289
களத்தழுத்தி வைத்திருந்துங் கண்டார்க ளாவி
கொளப்பறிக்குங் குஞ்சரம்போற் கொங்கை-வளத்
290 [தமர்வாள்
விண்ணிற் படரு மாசிலையை வெற்றிலையை
எண்ணிற் பெரிது மியைபுடைய-வண்ணக்
291
கடிதடத்தாள் கைமாக் கரமாங் குறங்காள்
பிடிநடையைத் தன்னடையாப் பெற்றாள்-கடிகமழுக்

தாரரான் திருஞான சம்பந்தன் பொன்னுருவை
யாராய்ந் தெழுத வவனருள்சேர்-சீராய
293
மூன்றாண்டு சாலுமென முன்னினைந்து வன்னங்கள்
தோன்று கிழியெடுத்துத் தூயவெளி-கான்ற
294
திருமுகமுங் கட்டழகு சேர்ந்தமணி மார்பு
மருமலரும் புன்முறுவல் வாயுந்-தருமகிழ
295
நீண்ட திருக்கரமு நேரில் புகழ்ப்பதமுங்
காண்டகுசீர் வாய்ப்பக் கசிந்தெழுதி-மூண்டவெழில்
296
கண்டு மயங்கிநின்ற காலை மறுகெதிர்ந்த [யாள்
தொண்டர் பெருமானின் றேற்றத்தா-லொண்டொடி
297
பிள்ளைப் பிரானினைவு பேதித்து மையலுற்றுள்
உள்ள முறுமாலை யோட்டியுன-தள்ளுமெழில்
298
மார்பிற் றிகழ்வதற்கு மாதவங்கள் செய்தரிய
சார்புபெறு மாலையெற்குத் தாவென்பாள்-சேர்பவளச்
299
செவ்வாய் திறந்தொருகாற் செல்வ மொழிபேச
லொவ்வா.தோ வையா வுனக்கென்பாள்-கொவ்வை
300 [யிதழ்
மாதரா ரெல்லாரு மன்னவனைப் பார்ப்பதுகண்
டேதிலா ரன்னோ ரெனக்கென்பாள்-வாதுசெயல்
301
போது மிறங்கிவந்து பொற்கரத்தா லெற்றழுவிக்
காதறவி ரென்னக் கழறுவாள் -மாதொருத்தி

அரிவை

ஆரா வமுத மவயவம் பெற்றனைய
சீரா ரரிவை திகழ்கமல-நேராய

பங்கமுற்ற தென்றுவிட்டுப் பாரடைந்த பூமாது
சங்கையிலா நான்மறையோன் றுரையினை-யங்கவனை
304
தெச்சிலென்று நீங்கி யிலகுங் கலைவாணி
வச்சிர பாணி வடுவுடல-மிச்சைகொளா
305
திவ்வுலகு வந்தசசி யீசனுதற் கண்ணெருப்பு
வவ்வ வுடலழிந்தான் மன்மதனென்-றவ்வா
306
னுலகிழிந்து வந்த வுருவா ரிரதி
கலக மிகப்பயின்ற கண்ணாள்-இலகொளியிற்
307
செம்பொற் குடமென்னத் தேமாங் கனியென்ன
வம்பொற்றேர் மேற்பகுதி யாமென்னக்-கும்பமென
308
விம்மிச் சுணங்கரும்பி மேலே யெழுந்திறுமாந்
தம்மைச் சிலீமுகமே லாகிநிற்பச்-செம்மைபெறுந்
309
தொய்யில் பொருந்திச் சுகந்தகறுஞ் சாந்தணிந்து
மெய்யிலிடை யுண்மை விளக்குமிரு-செய்ய
310
தனத்தினள் காருலவு தண்ணங் கடல்போல்
வனத்தி னகன்று வளர்ந்து-கனத்தமுதம்
311
கொப்புளிக்கு மல்குலாள் கோமா னுலாவருதல்
செப்புமுலைத் தோழியர்கள் செப்பக்கேட்-டொப்பரிய
312
வாசப் பனிநீர் மகிழ்ந்தாடிக் கண்டவர்கண்
கூசச் சுடர்பரப்பிக் கோலமிகு-தூசுடுத்துக்
313
கொங்கை நிறைந்திருந்தாற் குத்தி யெதிர்ந்தாரைப்
பங்கப் படுத்துமெனப் பட்டாய-வங்கியிட்டு

மேகத்தை வென்றகுழல் வெற்றி மலர்சூடித்
தேகத்து வாசந் திசைபரப்பி-யாகத்தை

315

யில்லான் சிலைபோ லிலங்கு நுதலுக்கு
நல்ல திலதம் நயந்துவைத்துக்-கொல்லுதொழிற்

316

கண்ணுக்கு மையிட்டுக் கண்டத் தணிபலகொண்
டெண்ணும் விரற்காழி யிட்டிழையான்-வண்ண

317

மறியாது செங்காத்தி லரடுவளை பூட்டிப்
பேரறிவாட னன்னும் புடைவை-நெறிமாறி

318

வீழாது காக்கமணி மேகலையை வீக்கிவள
ரேழா மிசைசெழுப்பு மின்சிலம்பு-தாழாத

319

தாளணிந்து தோழியருந் தானும் புறப்பட்டு
நீளவந்த வன்னநடை நேசித்து-வேளுவந்த

320

மேனி யழகன் விளங்குந் திருவீதி
வானி லணையா மதியனையான்-தானடைந்து

321

முத்துச் சிவிகைக்கு மொய்யொளியைத் தந்துவந்த
சித்தனிடஞ் சித்தஞ் செலுத்தினாள்-சித்தனையான்

322

சேரத் தினத்தோறுஞ் செய்வேன் றவமென்று
பாரத் திருந்தாள் பணிந்தெழுந்தாள் -தீர

தெரிவை

அரிவைப் பருவ மகன்று வடுத்த
தெரிவைப் பருவஞ் சிறந்தாள்-விரிவையுறுந்

324

தோகை பெறுதபசுந் தோகை மறுப்படரா
வாகை யிருந்து வளர்மதிய-மீகைப்

புயலழுங்க ரின்னல் பொழில்வளராக் கொம்பு
செயலமையாப் பாவை சிவத்துக்-கயலொருவர்
326
மிக்கா ரெனவுரைக்கும் வீணர்களைச் சார்பரவத்
தக்கா ரெனவிருண் டாடவர்பாற்-புக்காவி
327
கொண்டு மலரோடு கூடச் செருகநின்ற
வண்டமருங் கூந்தலாள் வாதுசெய்து-கண்டயிடும்
328
வாவனைய கண்ணினுள் வண்டாள கொண்பவள
கீளு கடலுதித்து நேர்ந்துபல-நாளுமொன்று
329
தார்த லழகலவென் றவ்விரண்டுங் கூடுவபோற்
சேர்தகைய வெண்ணகைபாள் செவ்விதழாள்-பார்
330 [தழுவி
நின்றமலை யெட்டெனவே நீளக் கணக்கிடுவர் [றயங்கு
பொன்றயங்கு கொங்கைப் பொருப்பிரண்டு—மின்
331
மாதை யடைக்து வளருவது காணுதார்
ஓதை பெருகுகட லேர்கைக்குப்-போகாத
332
சிற்றளவு கொண்டதோ வென்னத் திசைபரந்து
கற்றமதன் போற்று கடிதடத்தாள்—வெற்றி
333
இளங்கதலித் தண்டை யிசையுங் குறங்காள்
துளக்கு படிகமெனச் சொல்ல-விளங்குகிர்சேர்
334
கால்விரலாள் மாலன்று கண்ணிடந்த காலிறைவன்
பால்விளங்க வர்ச்சித்த பங்கயம்போற்-சால்புடைய
335
சிறடியாள் தன்மயிலேச் செம்மல் சிவஞானப்
பேறருளு மண்ணலிடம் பேசிவரத்-தூறுமறை

கிள்ளை மயிலெகினங் கேடிலளி பூவைகுயிற்
பிள்ளை மலயம் பிறந்தகால்-உள்ளவெலாந்
337
தூதுவிட்டுங் காணாது தோழியையும் போக்கியினி
ஏதும் விடுப்பதனுக் கில்லாது-வாதுசெயும்
338
நெஞ்சையும் விட்டு நிலையிழந்து வாடிநிற்பத்
தஞ்சந் தருஞ்சிறிய சாமியிவட்-கஞ்சலென
339
வாதரவு காட்டி யணைந்தான் றெருவிடையே
மாதரசி கண்டு வணங்கினாள்-போதலர்ந்த
340
புன்முறுவல் கண்டுமனம் பூரித்தாள் தன்னுடைய
சன்மநல முற்றதெனச் சாற்றினாள்-கன்மவசம்
341 [தாள்
பெற்றானெனைப்போற் பிறருண்டோ வென்றுரைத்
வற்றாக் கருணை வடிவுடையான்-முற்றாத
342
கொங்கை யமுதுண்டான் கோல மணிச்சிவிகை
யங்ககன்று சென்ற தணிமயிலாள்-பொங்கிவந்த
343
காமத்தீச் சார்ந்துசுடக் கண்ணருவி மண்ணனைப்பச்
சாமத்துந் தூங்காள் தனித்திருந்தாள் -சேமத்து

## பேரிளம்பெண்

விண்ணரசும் மண்ணரசும் வேறு பலர்செலுத்தப்
பெண்ணரசு கொண்டுவளர் பேரிளம்பெ-ணண்ணி
345 [னர்பா
லன்னை யனையவுய ரன்புடையா ளாரிடத்தும்
பன்னு மடிமைப் பணிவுடையாள்-பொன்னனைய
346 [னாற்
பொற்புடையாள் பூவின்பொறையுடையாள் மாமத
கற்புடையாள் மாரன் கணையறிவாள்-வெற்புடையான்

சென்னி விளங்குமதி சேர்ந்த வொளிசிறிது
துன்னிநின்ற காரிருள்போற் றோன்றியொன்றப்-பின்
348 [னலுருக்
கூந்தலாள் மைபடிதல் கூடாதென் றஞ்சனத்தை
ஏந்துவடி வேற்க ணெழுதிடாள்-தீந்தமிழாற்
349
கண்டு தலைகுனிந்து கற்பின் வணங்குபவோ
மிண்டுநிலை கீழ்நிலைக்கே மேவுவிக்குங்-கண்டறிமி
350
னெம்மையென நீதி யியம்புபவோ நுண்ணிடையை
அம்மையில தென்ப ரதுதெரிந்து-சும்மைமிக
351 [கள்கை
வேற்று திருப்பேரமென் றெண்ணுபவோ மைந்தர்
மேற்று யிருந்து விளையாட்டிற்-றோற்றலுத்துப்
352
பாரிற் கிடந்தமணிப் பம்பரம்போற் சாய்ந்தழகு
சேரு மிருதனத்தாள் செங்கரத்துச்-சாரவளை
353
யிட்டாற் பெருமா னெடுப்பா னெனவதனை
விட்டா ளனைத்துலகும் வெல்மதன்றேர்த்-தட்டாக
354
மன்னு நிதம்பத்தாள் வள்ளல் புகழையன்றிப் [னைப்
பின்னையொன்று பேசாத பெட்புடையாள்-மன்னவ
355
பார்த்தல் விழிக்கின்பம் பாடுதல் வாய்க்கின்பஞ்
சேர்த்தியினைக் கேட்டல் செவிக்கின்ப-மூர்த்திமலர்த்
356
தாணினைத்தல் சிந்தை தனக்குத் தருமின்பம்
பேணுதிருத்தொண்டடற்குப்பேரின்பம்-வானுதலீர்
357
வாரும் பதம்பரவி வாழுமென மாதருக்குச்
சாரு முபதேசஞ் சாற்றுவாள்-தேருதமிழ்

முத்தமிழின் மன்னர் முளரித் திருவடிக்கே
சித்தங் கனிந்துருகச் செப்புவாள்-பத்தியொடு
359
நீராடிச் சோலையினை நேடி மலர்கொய்து
நேரா யிருந்து நிறையன்பிற்-றூராக
360
வண்ணம் பலவமைத்து மாலை தொடுத்தெடுத்துக்
கண்ணங் களிக்குங் கவினுடையான்-பண்ணமருஞ்
361
சண்டத் தணிந்து கரங்குவித்துத் தாழ்வுடனே
தொண்டத் துதியுரைத்துச் சுற்றிவந்து-பண்டை
362 [மறை
யோதி யடிபணிந்தா ளுள்ளு றுவகைமிக
மாதரசிக் கிந்தான் மணமாலை-நீதியொடு
363
பேதை முதலாகப் பேரிளம்பெண் ணீறாக
ஓது பருவத் துலமாதர்-காதலிக்கப்
364
பேரருட் குன்றத்தான் பீடளிக்கும் பொன்னிவையை
நீருடைய மாகதிபரா னின்றபுகழ்-சாருதென்னு
365
டுற்றான் புகலியா ளேதுதமிழ்ப் பாமாலை
பெற்றான் றிருத்தாளைப் பேணுமன்பர்-வற்றாத
366
சிந்தைப் புரவியான் சிவிகைக் களிறுடையான்
முந்தை விடைக்கொடியான் முத்தமிழ்சொல்-சந்த
367 [விசைச்
சின்ன முரசினன் றெள்ளு சிவஞான [மொழி
மன்னு திருச் செங்கோல் வளமுடையான்-கன்னல்
368
பெற்றா னுமைஞானம் பேணி யளிக்கவரு
ளுற்றா னுவந்தா னுலா.

வாழ்த்து

நம்பந்தந் தீர்த்து நவைதீர் கதியருளுஞ்
சம்பந்த வள்ளல் சரண்வாழ்க-கொம்பந்த
மங்கை யிடம்பிரியா மாதேவன் றன்னடியார்
எங்கும் பொலிக வினிது.

முற்றிற்று.

---

உ
சிவமயம்
பாலறுவாயர் துணை

# குன்றுதோருடல் வெண்பா.

காப்பு.

குன்றுதோ ருடுங் குமர னிணையடியிற் [துணை
சென்றுசேர்வெண்பா நூல்செப்புதற்கு-நின்று
செய்யுங் கரிமுகத்துச் சேயும் புகலியினு
முய்யவந்த சேயு முவந்து.

நூல்

குன்றுதோருடல்

உலகிற் பலவா றுழன்றீ ருமது
கலகப் பிறப்பைக் கடிவா-னிலகுமணி
மன்றுதோ ருடு மணவாளன் பெற்றெடுத்த
குன்றுதோ ருடலமர் கோ. 1

அண்ணுமலை

நிலைபெறுமா றெண்ணுதியே னெஞ்சமே வீணி
லலைவுறலா வின்பமுனக் காமோ-மலைவியந்த
வுண்ணு முலையா ளுவகை யுறவருசே
யண்ணு மலையை யடை. 2

அத்தமயனமலை

உண்மையறி வானந்த முற்ற வுருவத்துத் [வின்
திண்மையுறு பேரின்பச் செம்பொருளான்-வண்மயி
முத்த னறுமுகவன் மூவா விளமுருக
னத்த மயனமலை யான். 3

அத்திமலை

தன்னடைந்தார்க்கின்பங்கள்சார்விப்பான் றண்மதிய
மின்னடைந்த வேணி விமலன்சேய்-பொன்னடைந்த
முத்தி நலஞ்சேர முன்னுவீர் சென்றடைமி
னத்தி மலையா னடி. 4

அரங்கமலை

உன்னலத்தை நாடி யுலகிற் பிறரையெலா
மின்னலுக்காட் செய்வா யிதுதகுமோ-வுன்னே
டிரங்க வொருவனுள னென்னிலவ னெஞ்சே
அரங்க மலைமுருக னும். 5

அருக்கொணுமலை

எல்லார் கதையு மெளிதில் விரித்துரைப்பே
னல்லார் தொழுங்குமர நாயகனைச்-சொல்ல
விருக்கொணு தென்றுரைக்கு மென்ப ரெனினு
மருக்கொணு மாமலையு ளான். 6

அழகுமலை

குறுமுனிக்கு முன்னங் குருவாகி வண்மை
பெறுதமிழைப் பேசியநீ பேதைக்-குறுதி
பழகு தமிழ்ப்புலமை பாலித் தருள்வா
யழகு மலைப்பண்டி தா. 7

ஆவுக்கோடு [தல்

முத்தமிழால் வைதார்க்கு முட்டறுத்து வாழ்வளித்
சித்த னருணகிரி செப்பிஞ-னத்துதமிழ்ப்
பாவுக்கோ நீயருளைப் பண்ணு திருந்திடுவா
யாவுக்கோ டாயென்னை யாள். 8

ஆனைமலை

மூவுலகுஞ் சென்றுவென்று முக்கண்ண னல்வரத்தாற்
றேவுலகர் தொண்டிற் செருக்குறுசூர்-வீவுறலால்
வானைமலை யாதுநிலை வாழ்வுவைத்த மாமயிலோ
ஞனைமலை யானைநினை வரம். 9

இந்திரநீலப்பருப்பதம்

நெஞ்சமே யென்னேநீ நித்தங் கவலுகின்று
யஞ்சலென மாமலையா ஞதரிப்பான்-வெஞ்சமர
வேலப்பன்' ஞறுமுக'மேவப்ப'னிந்திரவா
னீலப்ப ருப்பதத்தை நேடு. 10

இருக்குவேளூர்மலை

நிலையா வுலகத்து நிற்கு முயிர்கள்
கலையா மயல்பெருகக் கன்னற்-சிலையா
லுருக்குவே ளேத்து முருவத் தொருத்த
னிருக்குவே ளூர்மலையை யெண். 11

ஈங்கோய்மலை

ஓயாப் பவத்தி லுழல வினைசெய்தேன்
மாயா வுணர்வு மலமுடைய-காயாவேன்
றீங்கோய் பொழுதுவரச் சிந்தித்து வந்தித்தே
னீங்கோய் மலைமுருக னே. 12

உதயமலை

இன்பம் விரும்புவதூஉ மின்னல் வெறுப்பதூஉ
மன்பதைக ளுவ்வே வழங்குவதாந்-துன்பா
லிதயமலை வீரழியா வின்பமுற வேண்டி
லுதயமலை வேடோமுவீ ருற்று. 13

ஞாதிமலை

பெறுதற் கரிய பிறவியினைப் பெற்று
முறுதற் பரத்தை யுணரா-ரறுதியிட்டு
நேதி யெனமறைக ணின்று முழங்குஞா
ஞாதி மலைதொழா ருண்டு. 14

எறும்பூர்மலை

காலன் வருநாள் கணித்தறிய வொண்ணாது
வேலன் பதமே மிகுதுணையாங்-கோல
நறும்பூ வுறையயன்மா ஞாலமுண்டோன் போற்று
மெறும்பூ ரிருங்கிரியை யேத்து. 15

ஏமகூடமலை

போதவத்தே போக்கிப் புறக்கணித்து வாழுவாய்
சோதவத்தை யான்மயலின் மூழ்காதே-மாதவத்தோர்
நாடமலை கொங்கை நயந்தழுது செய்யேம
கூடமலை யானைக் குறி. 16

எழுமலை

வள்ளிமலை மான்பெற்ற மங்கை மணவாளன்
வெள்ளிமலை யீசன் விரும்புசே-யுள்ளுவந்து
வாழுமலை பல்வளங்கள் வாய்ந்து நலம்பெருகு
மேழுமலை யாமென் றிசை. 17

ஐயர்மலை

கூர்ந்த வறிவுடையோர் கோதி லுயிர்களெலாஞ்
சார்ந்ததன் வண்ணமுறல் சாற்றுவார்-சேர்ந்தறியாக்
கையர் சிறுமதியோர் கற்ற தமிழுடைச்சே
யையர் மலையை யடை. 18

ஐவர்மலை

மாறவித்த சிந்தை மயலகற்றி நாயேற்குப்
பேறளித்த செல்வப் பெருந்தகையார்-கீறளிக்குஞ்
சைவர் தமிழ்க்குதவு சாமி புயறழுவு
மைவர் வரைவாழு வார். 19

கஞ்சமலை

தீமருவு நெற்றிவிழி சிந்துபொறி தந்தவுருக்
காமர் சரவணத்திற் கண்டுவந்து-மாமலையாள்
கொஞ்சமலை யாறையொன்றாக் கூட்டி யணைக்கவரு
கஞ்சமலை நாயகன்றாள் காப்பு 20

கதிரைமலை

நாதமு நாதாந்த வடிவு நவைதீர்ந்த
போதமுங் கர்றைத போதமாய்-வேதக்
குதிரை யுகைத்த குமரன் பொருவில்
கதிரை மலையமர்ந்தான் காண். 21

கந்தமாதனமலை

செங்கமல வல்லி திருமான் மருமானெம்
மங்கயற்க ணம்மை யரும்புதல்வன்-பங்கயச்செம்
போதன சேவடி பொலிவா னுறைகந்த
மாதன மாமலையை வாழ்த்து. 22

கபிலர்மலை

ஆனை முகத்தோ னநுச னுயர்தேவ
சேனைத் தலைவன் சிவகுமர-னேனை
விபில னமலன் விளங்கு மயிலோன்
கபில ருயர்வரையான் காப்பு. 23

கயிலைமலை

ஐந்து புலனு மலைக்க மிகவருந்தி
நைந்து மெலிந்தா னலமுறுமோ-சந்த
மயிலை யயிலையுடை வள்ளன் மகிழ்ந்த
கயிலை மலையையுன் னுட் காண். 24

கல்விராயன்மலை

ஆணவங் கன்ம மவமாகு மாயையெனக்
காணவல மும்மலத்தாற் கட்டுண்டு—வீணடையா
தல்விரா யன்பறியா தார்ந்தவுளச் சூர்தடிந்தோன்
கல்விரா யன்மலையைக் காண். 25

கழுகுமலை

எண்ணின் றி நின்றவுயிர் யாவினுமுண் மன்னியெனக்
குண்ணின் றுணர்த்து மொருகுமரன்-விண்ணின்
றெழுகு கதிரொளிபோ லுற்றதிரு நீற்றன்
கழுகு மலைமகிழ்வான் காண். 26

கழுக்குன்றம்

எண்ணிய வெண்ணியாங் கெய்துவார் மாமுருகன்
திண்ணிய பாதந் தினந்தொழுவார்-கண்ணி
வழுக்குன்றன் பாலடையார வாழ்வருள்வா னெஞ்சே
கழுக்குன்றன் பாதங் கருது. 27

கற்குடி

அலைசுவறப் போகி யசுரர்குல மாய்த்து
மலைபிளந்த கூர்வடிவேன் மன்னு-நிலையிடமாம்
விற்குடி வீரட்ட மேவு சிவகுமரன்
கற்குடி மாமலையான் கை. 28

கனகமலை

அம்மை மடியி லமருங் குமரனடி
தம்மைவிழி யொத்திமகிழ் சாருதலால்-வெம்மைப்
பனகமலை மேனிப் பரனுவந்த பூவாங்
கனகமலை வாழ்குமரன் கால். 29

காளத்தி

கண்ணப்ப ரன்புவலைக் கட்டுண்டு காளாறி
லெண்ணப் பெரிய விதமளித்த-புண்ணியத்தான்
வாளத்தி மாலை வயங்கு பெருமான்சேய்
காளத்தி மாமலையான் காண். 30

குடகுமலை

ஆவி யுடலுடைமை யாமுப் பொருளுமென்பான்
மேவிவிலை கொள்ளின் மிகநன்றாம்-பாவித்
தடகு பெறுதி யெனினு மமைவேன்
குடகு மலையிற் குகா. 31

குடுமியான்மலை

தென்சொன் மகிழுஞ் சிவகுமாற் கன்புசெய்மின்
இன்சொ லியம்பி யிசைபெறுமின்-வன்சொல்
விடுமியா னென்னதெனல் வேண் டன்மி னுள்வான்
குடுமியா னன்மலைவாழ் கோ. 32

குமரமலை

செத்துப் பிறக்கின்ற தெய்வ வழிபாடு
நத்திப் பலவலத்தை நாடாதீர்-முத்தந்
தமரமலை யாழித் தரணிக்கோர் தெய்வங்
குமரமலை வாழுங் குகன்.

குருடிமலை

மாடுமனைமக்களின்மேல்வைத்தவினைப்பற்றொழித்து
வீடு பெறுவான் விழைமனமே-கூடி
யிருடி கணம்வழிபட் டேத்த வளருங்
குருடி மலைச்சேயைக் கூறு. 34

குருமலை

இன்ப முறமுயலற் கேற்ற திளமையன்றே
பின்பு நரையைப் பெருந்திரையைத்-துன்ப
விருமலை மேவி யிடரடையா முன்னங்
குருமலை வேள்பாதங் கூடு. 35

குன்றக்குடி

ஏறுமயின் முன்னாளி லேற்றதொரு சாபத்தாற்
கூறு மலையுருவங் கொண்டிருப்ப-மாறுறுசூர்
வென்றக் குலமலையின் மேவி யருடருவான்
குன்றக் குடியிற் குகன். 36

கொங்கணமலை

குருட ரெனினுங் குமர னடியை
வருடு மனத்தரெனில் வாழ்வார்-கருட னுடைச்
செங்கண னுன்முகனுந் தேடி யறிவரிய
கொங்கண மாமலையைக் கூடு. 37

கொடுங்குன்றம்

வஞ்சகஞ் சூது வளரும் பொருமையிவை
யஞ்சி முருக னடியிணையை-நெஞ்சி
லிடுங்குன்ற லோர்சிறிது மில்லாது காப்பான்
கொடுங்குன்ற மேய குகன். 38

கொல்லிமலை

தந்தைநுதற்கண்ணிருந்துதாய்கங்கைபொன்னுதரம்
வந்துமையாள் கூட்டி வளர்த்தெடுப்ப-முந்துமலை
வில்லிமலை வல்லிமகிழ் மேவவளர் பேராளன்
கொல்லிமலை வாழ்வுடைய கோ. 39

கொழுந்துமாமலை

வானை நலம்பெருக்கி மாமகவா னீந்ததெய்வ
சேனை மகிழமணஞ் செய்தவளி—ஞானயெனுந்
தேமலை மேவுகொங்கை சேருவான் வான்கொழுந்து
மாமலை வாழுமொரு வன். 40

கோணமலை

திருநீறுங் கண்டிகையுஞ் சிந்தையிரு ணீக்கிப்
பெருநீர்மை சேர்க்குமென்பர் பேணி-யுருநீவப்
பூணமலை யுள்ளத்திர் பூதிமணி போற்றிநிதங்
கோணமலை வேணினை மின் கொண்டு. 41

கோளக்குடி

வினையினல் வந்து வினைவிளைக்கு மாக்கை
தினையளவு முன்பணியைச் செய்யா-துனைமறந்து
நீளக் கிடந்துழல நீவிடுத னன்றுமோ
கோளக் குடிமுருகா கூறு. 42

சிராப்பள்ளி

இவ்வுடலம் விட்டுயிர்தா னேகிற்றே லீசனரு
ளெவ்வகையி லெய்துவைநீ யென்னெஞ்சே-செவ்வே
யிராப்பள்ளி கொண்டோ ரெழுமுறுதி யுண்டோ
சிராப்பள்ளி வேள்பாதஞ் சேர். 43

சிவகிரி

உப்பிட்ட பேரை யுளவரையு மெண் ணுகெனச்
செப்புவார் சான்ரூேர் சிறிதேனுந்-துப்பி
லவகிரி பேசி யலையாது நாவே
சிவகிரி வாழ்குகனைச் செப்பு 44

சிவனடிபாதமலை

நெஞ்சமே வாழ்க்கை நிலையறியா தெந்நாளும்
வஞ்சியரைப் பொன்னை மணையணைந்து-துஞ்சேல்
பவனடி யீசானன் பாலவிழித் தோன்றல்
சிவனடி பாதமலை சேர். 45

சிவன்மலை

ஐந்து முகத்தவனே யாறு முகங்கொண்டு
வந்தன னென்று மறைபுகலு-முந்தை
எவன்மலை வில்லாள னென்னி லவனே
சிவன்மலை நின்றருளுஞ் சேய். 46

சிற்கொந்தமலை

தவவேடம் பூண்டு தமிழ்முருகற் பேசா
தவவேடம் பூண்டல்ல வார்த—றவருகு
மற்கொந்த வித்த வயவீர வாகுமுனேன்
சிற்கொந்த மாமலையைச் செப்பு. 47

சுருளிமலை

போருக்கு வந்து பொருந்தா தனசெய்த
காருக் குவந்த கருமேனிச்-சூருக்
கருவி மயிலூர்தி யாக்கி யமர்ந்தான்
சுருளி மலைவாழ் சுடர். 48

சுவாமிமலை

பெற்றுன் குருவாய்ப் பிறந்தானைக் கொண்டுணர்த
லற்றும் குழலா ரறியினகை-வற்று
ரவாமி யறியா தானுணர்ந்த தேதோ
சுவாமி மலைக்குரவன் சொல். 49

செங்கோடு

ஒருவ னொருத்தி யுருவ மிரண்டு
மருவு மொருவடிவா மன்னி-யுருவிலிரு
பங்கோடு வாழும் பரம்பொருளின் செல்வனுயர்
செங்கோடு மேயவிளக் தேவு. 50

சென்னிமலை

வானேரு மேவவொரு வன்பதத்திற் சார்விக்க
ஏனே ரெவாறிவா ரெங்குறவர்-மானேது
கன்னி மணவாளன் கையிலொரு வேலெடுத்த
சென்னி மலையானைச் சேர். 51

சேர்வராயன்மலை

இம்மை மறுமை யிரண்டிற்கு மின்புதருஞ்
செம்மை யறியாச் சிதடரெலா-மிம்மைநலர்
தேர்வரா யங்தோ தினங்கழிப்பார் சிந்தைசெயார்
சேர்வரா யன்மலையிற் சேய். 52

சையமலை

மணமளிக்கு மக்கள் வளமளிக்கு மன்னும்
பணமளிக்கும் பேறளிக்கும் பண்போ-டிணைவளிக்கு
மைய மிலையுலகி ராறு முகவனெங்கள்
சைய மலைவாழ்வா னருள். 53

சோலைமலை

நீரிற் றுயின்று நிலவுலகங் காத்தருளுங்
காரிற் றிருமாலோன் காண்மருகன்-போரிற்செல்
வேலைமலை மீதுவிட்ட வீர னுறைவதுயர்
சோலைமலை யென்றுநீ சொல். 54

ஞானமலை

சரியை கிரியை தவயோகம் ஞானம்
பெரிய படிகளெனப் பேசற்-குரியனவான்
மோன நிலையடைய முன்னுவா யென்னினெஞ்சே
ஞான மலைக்குகனை நாடு. 55

தணிகைமலை

நோக்குகைகண் ணின்ப நுகருகை மூக்கின்பம்
தேக்குபுகழ் கேட்கை செவியின்ப-மாக்கை
பணிகை யுடலின்பம் பாடுகை வாயின்பம்
தணிகை மலைமுருகன் றாள்- 56

தலைமலை

விருப்ப நிறைவேற வேறொரு நீனைத
னெருப்பிற்றண் ணீர்மையுண்டோ நெஞ்சே-திருப்
சிலைமலை யெங்கள் சிவனார் குமரான் [போற்
தலைமலை வாழ்வானைச் சார். 57

தனிமாகிரி

எத்தனையோ தாய ரிடரடையத் தோன்றியிறந்
தித்தனையு மின்னலே யெய்தினேன்-முத்தா
இனிமா நிலத்துவரா வின்பமரு ளென்று
தனிமா கிரியானைச் சாற்று. 58

திரிகூடமலை

நெஞ்சகத்து நீங்காது நிற்பதனா லந்தகவுன்
வெஞ்சபரஞ் செல்லாது வென்றிகொள்வேன்-அஞ்ச
[லிப்போர்
தேடமலை மேலொளிருஞ் செல்வன் சிறந்ததிரி
கூடமலை வாழுங் குகன். 59

திரிமூர்த்திமலை

மூலப் பொருளாய மூர்த்தி யிளங்குழவி
போலப் பொலிமூர்த்தி போற்தெனக்குச்-சாலப்
பரிமூர்த்தி மாகடப்பம் பைத்தார்கொள் மூர்த்தி
திரிமூர்த்தி மாமலையைச் செப்பு. 60

திருமலை

தொண்டாற்றிப் பாடுகின்ற தூய ருடலமெல்லாங்
கண்டா யினித்துக் கவின்பெருக்குஞ்-செண்டா
லொருமலை மேலடித்த வுக்கிரப்பேர்த் தென்னன்
திருமலை மாமுருகன் சீர். 61

திருவெள்வரை

பரந்த வுலகுயிரைப் பற்றிகலஞ் செய்துந் [கொண்ட
துரந்துநின்ற தன்னையுளக் தேசய்த்துக்-கரந்து
கள்வரை மேவுங் கடவு ணிவந்ததிரு
வெள்வரை மேவிநின்ற வேள். 62

தீர்த்தமலை

கங்கை சடைக்கரந்த கண்ணுதலான் ஞேற்றுவிப்பக்
கங்கைபெற வந்துதித்த கண்ணுளன்-செங்கையினிற்
கூர்த்த வயி லுடைய கோமான் றமிழ்முருகன்
தீர்த்த மலைமேய சேய். 63

துங்கமலை [ணைந்து

பொற்பதத்தைச் சிந்தைவைத்துப் போற்றினர் பால
கற்பகமுந் தொண்டுசெயக் காத்திருக்கும்—விற்புருவச்
செங்கமலை யீன்ற திருவுடையார் காதலிக்கத்
துங்கமலை வாழுஞ் சுடர். 64

தென்கயிலாயம்

பிழைத்தேனு னென்னினும் பேதுறு தென்னை
யழைத்தேதந் திர்த்தருளு மண்ணல்-கழைத்தோட்
குயிலாய சொற்குறத்தி கொங்கைமகிழ் கோன்றென்
கயிலாய மாமலையான் காப்பு. 65

தென்சேரிக்குன்று

சிந்தைக் குரங்கே தெளியா தலைந்தலைந்து
நிந்தைப் பெருங்கடலு ணீந்தாதே-யெந்தைசடை
மின்சேரிக் கன்று விளங்கும் பரமுரைத்தான்
தென்சேரிக் குன்றே தெளி. 66

தென்றன்மாகிரி

மலமுடையா ரன்றே மயலடைவா ரென்பர்
வலமுடைய கூர்வடிவேன் மன்னு-நலமிகுந்த
மன்றன்மா னங்கை மயன்மிகுந்தா யென்னேநீ
தென்றன்மா வண்கிரியாய் செப்பு. 67

தேவர்மலை

தோற்றுவித்துங் காத்துந் துடைத்து மறைத்துமரு
ளேற்றுவித்து மின்ப மெளிதளிப்பரன்-சாற்றுமொரு
மூவர் தெளியா முதல்வன் முருகனுறை
தேவர் மலையைநெஞ்சே சேர். 68

தேனிமலை

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கெனலாற்-குற்றமுடை
யூனி லியைந்தபற்றை யோட்டுமின் பற்றுவைமின்
தேனி மலைவேளைச் சேர்ந்து. 69

தோகைமலை

மாத ரடியே மலரென் றதையணியக்
காத லுறுந்தலையே கைதொழுது-மூதறிஞ
ரோகை யொடுபணிய வுள்ள நிறைவருளுந்
தோகை மலைச்சேய்தாள் சூடு. 70

நந்திமால்வரை

மகரயாழ் வல்லோன் மகத்துப் பிறந்த
தகரடக்கித் துன்பந் தவிர்த்தோன்-பகர்கமல
வுந்திமா லீன்ற வொளிநகையார் வேட்டகுக
னந்திமா லவ்வரையை நாடு. 71

நாயனார்மலை

விளக்கைப் பழமென்று விட்டிலுயிர் மாய்த்துக்
கொளக்கண்டு மான்விழியார் கூட்டிற்-களக்குமுறப்
போயனார் நோக்கிற் பொலிவிழக்கு நெஞ்சமே
நாயனார் மாமலையை நண்ணு. 72

நாரதமலை

மெய்கண்ட தெய்வமென மேலோ ரெடுத்துரைக்கு
செய்கண்ட வேல னிலவுலகைக்-கைகண்ட
மாராத மரக்கி மதிலொருமூன் றட்டான்சேய்
நாரத மாமலையை நத்து. 73

பச்சைமலை

சேவல் வலனுயர்த்த சீரான னன்பர்தம
தாவல் முடித்தருளு மாறுமுகன்-பூவலருஞ்
செச்சை மகிழ்ந்தணியுஞ் செவ்வேள் விரும்பியுறை
பச்சை மலையைப் பகர். 74

பரங்கிரி

சிந்தைநிறை காதல் செயவளரு மன்புடைய
மந்தி தழுவி மகிழ்வுடனே-வந்து
குரங்கிரி வான்றருக்கள் கொண்டபொழில் மன்னும்
பரங்கிரி வாழ்குகனைப் பாடு. 75

பருப்பதம்

தக்கன வின்ன தகாதன வின்னவெனப்
புக்கறியார் வாணுளைப் போகவிட்டு-மக்க
ளிருப்பதம் வாழ்க்கையினி லேதுநலங் கண்டார்
பருப்பதம் வாழ்சேய்தாள் பற்று. 76

பவளமலை

ஆனைமுகங் கொண்ட வவுணற் பொருதழித்து
மானை மணம்புணர்க்க வந்தணைந்த-வானத்
தவள மருப்புடையோன் றம்பி மகிழும்
பவள மலையைப் பணி. 77

பழநிமலை

கனிபெறுதற் காகக் கலாபமயி லேறு
முனிகையிற் றண்டுடைய மூர்த்தி-கனியாம்
பழநிமலை மார்பணைத்துப் பாராட்டும் பாலன்
பழநிமலை வாழும் பரன். 78

புகழிவரை

கண்டிகையை வெண்ணீற்றைக் கண்டாற் பரிகசிப்பர்
பண்டை யறவுரைகள் பற்றில்லா-மீண்ட
நிகழிவரை யாறுமுக வேந்தையன்பர்க் கூடிப்
புகழிவரை நாளும் புகல். 79

### பெருமாள்மலை

பெற்ற மனித்தப் பிறவியே முத்தியின்ப
முற்றத் தருமென்பர் மூதறிஞர்—கொற்றத்
திருமா லயனார் சிறைவிடுத்த செல்வன்
பெருமா ளருவரையைப் பேசு. 80

### பொதியமலை

இம்மைக்கு வேண்டியபே றீரெட் டுடனுயர்ந்த
வம்மைக்குரிய வதுவொன்று-செம்மை
நிதியமலை யாப்பெற்று நீடூழி வாழ்வார்
பொதியமலைச் சேய்தொழுதார் புக்கு. 81

### மகாதேவமலை

பாதகமு நோயும்வெம் பாம்பும் பசாசுமடற்
பூதமுந்தீ நீறும் புறங்கொடுக்கு-மோதிப்
புகாதேவ லாற்றுவினை பொற்புடைநன் னாவே
மகாதேவ மாமலையை வாழ்த்து. 82

### மயிலமலை [கைத்

வெள்ளிவெற்பன் பாற்றோன்றி மேவுமலை மாதுகொங்
தெள்ளமுத முண்டுவரைச் சேயிழையை-யுள்ளிச்
சயில மகிழ்ந்துறையுஞ் சாமி யுவந்த
மயில மலைதொழுமின் [வந்து. 83

### மயேந்திரமலை

இலங்கை யிலங்க விருந்தரசு செய்சூர்
வலங்கொளுதற் கோர்துணையா மன்னிக்-கலங்காச்
சயேந்திர னாகநின்ற தாரகனை வென்றோன்
மயேந்திர [மாமலைவாழ் வான். 84

### மருதமலை

வென்றியுடைச் சிங்கமுக மேவித் திறற்சூருக்
கன்றுதுணை நின்ற வடலசுரக்-குன்றைப்
பொருதமலை பன்னிரண்டு புக்கவுடற் கொற்றன்
மருதமலை வாழுமொரு வன். 85

மலையாண்டிமலை

மானே மரகதமே மயிலே குயிலேகோற்
றேனே யெனக்கொஞ்சிச் சேயிழையார்க்-கானு
மிலையாண்டி யாதுமுனக் கின்பமறி நெஞ்சே
மலையாண்டி மாமலையை வாழ்த்து. 86

முதுகுன்றம்

அலையாழி சூழு மவனிமிசைத் துன்ப
மிலையா யருள்புரிவே னென்று-மலைதோறு
நின்ற முருக னிமல னுயர்ந்தமுது
குன்ற முடையவிளங் கோ. 87

மேருமலை

தலையொன்று கங்கையான் சாரார் புரத்தை
இலையென்று வெல்வ ரினியந்த—சிலையென்று
தேருமலை யாறுமுகத் தெய்வம் விளங்குமலை
மேருமலை யென்று விளம்பு. 88

வள்ளிமலை

மானின வந்து வயவேடர் கண்டெடுப்ப
வானீள் தினைப்புனத்து மன்னுமங்கை-கோனிங்கத்
தெள்ளி யளித்த தினையிற் பெருவிருப்பன்
வள்ளி மலைவாழு வரன். 89

வாவிமலை

மோகமெனுங் காடு முழுதுந் திரிந்தலைந்து
தாகமொடு மாதர் தனமென்னு-நாகமிசைத்
தாவி யுழலல் தகுமோ மடநெஞ்சே
வாவி மலைவேளை வாழ்த்து. 90

விநாயகமலை

நன்னர்ச் சுவையி னறுவிய வேண்டாது
மன்னுங் கடுவை மகிழ்ந்துநனி-தின்னு
மிநாயக முற்றேனுக் கின்பமெளி தீவான்
விநாயக மாமலையில் வேள். 91

விந்தமலை

அங்கயற்க ணம்மையடி யசர்ந்து மகிழ்ந்தவளின்
கொங்கையமு தாண் ணுங் குலக்கொழுந்து-செங்கரத்
தந்த மலையானை தம்பியெனக் கொண்டாடும் [திற்
விந்த மலையானை மேவு. 92

விமானகிரி

மும்மலத்தி லாழ்ந்து முதற்பொருளைக் காணாது
வெம்மை நரகத்து வீழாதே-தம்மைச்
சமான மெவருமின் றித் தாமுயருந் தெய்வம்
விமானகிரி யானை விரும்பு. 93

விராலிமலை

நம்பினேர் துன்ப நசுக்கி நலந்தருதற்
கும்பினே நாளு முறுவனென-நம்பினே
புராலி மகிழப் புகுவான் வளங்கொள்
விராலி மலையுடைய வேள். 94

வீரமலை

நெஞ்சை யடக்க நெடுநாள் முயன்றுவிட்டேன்
மிஞ்சலன்றி வேறுபயன் மேவவில்லை-கொஞ்சமும்
மீர மிலைநாயே னென்செய்வே னறுமுகா
வீர மலையாய் விளம்பு 95

வெண்ணெய்மலை

சிந்தித் திருமனமே செல்வ மிகப்பெறலா
மெந்தப் பிணியு மெதிர்நில்லா-வந்தெதிர்சூர்ப்
புண்ணெய் வடிவேல் பொலியுந் திருக்கரத்து
வெண்ணெய் மலையுடைய வேந்து. 96

வெள்ளிமலை

நாலு மறையு நயந்தறிந்த நான்முகனை
ஏலுமுறை வெஞ்சிறையி லிட்டகோச்-சாலுமெழிற்
புள்ளி மரையுவந்த பொற்கரத்தன் போற்றுமொரு
வெள்ளி மலையாளும் வேள். 97

வேங்கடமலை

எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கெனலா-லந்நன்றி
யாங்கட னாற்றி யயிலோற் கடிமைசெய்வாய்
வேங்கட மாமலையின் மேல். 98

வேள்விமலை

ஆறு முகமுமீ ராறு கரமுமூ
வாறு விழியு மமைவுடையான்-னாறுமலர்த்
தாள்விமலை கொஞ்சுந் தமிழ்முருகற் கன்புசெய்து
வேள்விமலை நெஞ்சமே வேண்டு. 99

வையாபுரி

துன்பம் வருங்காற் றொடர்ந்துவந்து மாற்றுகின்ற
வென்பொன் மணியா மிளமுருகை-யன்புடனே
யையா வுனையன்றி யாருதவி செய்வரென்று
வையா புரிமலையை வாழ்த்து. 100

வாழ்த்து

குன்றுதோ றாடுங் குமர னடிவாழ்க
வென்றிசேர் சைவம் விளங்குகநந்-தென்றமிழும்
பூதிமணி யஞ்செழுத்தும் போற்றுவா ரோங்குசமன்
னீதிமுறை செய்க நிலத்து.

உ
சிவமயம்
பாலறாவாயர் துணை

# ஞானசம்பந்தர் ஒருபாவொருபஃது

### காப்பு:

ஆனை முகத்தா னடிமலரைச் சிந்தித்துக்
கூனை நிமிர்த்தருளுங் கோமாற்குத்-தேனைவிஞ்
ஒண்டமிழின் பாவா லொருபா லொருபஃது [சும்
கண்டு பகர்வேன் கனிந்து.

### நூல்

திங்களுங் கொன்றையுங் கங்கையுந் தங்கும்
செஞ்சடைப் பெருமான் கிஞ்சுக வாயுமை
நல்லருள் பெற்றுச் சொல்லிசைத் தமிழ்தரக்
காழியிற் றோன்றிய வேதிசைப் பயனே!
தென்னாட் டுள்ளோர் பன்னாட் புரிந்த
நற்றவ வுருவா வுற்றமெய்ப் புலவ!
வளவர் நாடு வளவர் காடே
எனப்புகழ்ந் துரைக்க வனப்பொடு நிற்போய்!
வேத முணர்சிவ பாத விருதயர்
பகவதி மதலையாத் தகவொடு வந்தோய்!
உன்னடி மலரைச் சென்னியி லிருத்தி
வேண்டுவ தொன்றுண் டுண்டவ! வடியேன்

நடக்கினு மிருக்கினுங் கிடக்கினு நிற்கினு
மெத்தொழில் செய்யினு முத்தவுன் றூண்மலர்
என்னுள நீங்கா திருக்கும்
வரந்தந் தருள விரந்தன னினையே. 1

நினைப்பொடு மறப்பற வுனைப்புணர் வேமென
மெய்கண்ட நூல்க ளுய்யுமா றுணர்த்தும்
நினைப்பற விரும்பி னினைப்புணர் வாழ்க்கை
அடைய வொண் ணுமோ விடையமர் கடவுள்
அருளமு துண்ட தெருளிளங் குழவி!
மறப்பற விருக்கத் துறப்பரு மாநில
வாழ்வினி லமிழ்ந்து தாழ்வுறு நாயேற்
கியலா தாக மயலா கின்றேன்
எத்தனை கால மெத்தனை பிறவி
எடுத்தெடுத் திளைப்பேன் தொடுத்திசைத் தமிழ்தரு
முத்தமிழ் விரக! சித்த மிரங்கி
உன்னடி மறவா வென்னையு மின்பம்
அடைகவென் றெண்ணிற் றடையெலா நீக்கிப்
பேரா வின்பம் சேரா வெனையுறும்
ஆதலிற் சண்பை போதரு மரசே!
அல்லல் நீங்கிய மல்லல் வாழ்க்கை
மேவுமா றருளல் வேண்டும்
நாவலர் புகழிசைப் பாவல ரேறே. 2

ஏறு பொறித்த மாறிலாத் திண்கொடி
யிறைவன் தனதரு ளிறைவியோ டுவந்து
தோடுடைச் செவியும் பீடுடைப் பிறையும்
காடுடைப் பொடியும் நாடுறக் காட்டி
விடைமிசைத் தோன்றி யுடையவ னினக்கருள்
செய்யுமா றுழுதனை ஐய! வெம் பிறவிக்
கடலகத் தழுந்தி யிடர்மிகுந் தழுமியாம்
கண்ணுதற் கடவுள் நண்ணுதற் கெவ்வா
றுழுதல் வேண்டு மடியேம்
பழுதிலா வுன்போற் பயன்பெற வுரையே. 3

உரையே னின்புகழ் நரையா மளவும்
எண்ணே னுனதடி மண்ணும் வரையும்
கேளே னினதிசை வாளா பொழுது
போக்குவன் மலர்க்கழல் பூக்கையாற் போற்றேன்
பணியேன் கழல்கள் அணியே னடியவர்
இணக்கம் பெறுவான் குணப்பெருங் குன்றே
காணே னுனதுரு நாணேன் பொய்ந்நெறி
நிற்றலிற் சிறிதும் கற்றையொண் குழலுமை
தந்தமெய்ஞ் ஞானசம் பந்தமா மணியே
நின்னருள் பெற்று மன்னுதற் கெண்ணில்
வியப்பே யாகு முயப்போம் வழியினை
அருளலில் வள்ளனீ யாதலின்
வேண்டின னுன்பால் மாண்டமி ழமுதே 4

முதல்வா! வுமைசிவன் புதல்வா! புகலியின்
மன்னவ! திருநிலை யன்னை யின் ஞான
போனக! முத்தமிழ் ஞானசம் பந்த!
காழியர் தவமே! ஏழிசை யுருவே!
வெங்குரு வேந்த! கங்கையின் மைந்த!
பாலறு வாய! ஞாலமா ளுடையாய்!
முத்தமிழ் விரக! வித்தகக் கவுணியர்
குலமணி விளக்கே! நலமிகு தமிழ்மறை
முழங்குசெந் நாவோய்! வழங்கிசைப் பாவோய்!
நற்றமிழ்த் துணையே! மற்றுறும் பரமத
கோளரி யேறே! நாளுமின் னிசையால்
செந்தமிழ் பரப்ப வந்துறு மணியே!
என்றுனை யேத்தி நின்றுவழி படுவோர்
உலக வாழ்க்கையிற் பலநலம் பெற்று
மறுமையிற் சிவகதி மன்னிப்
பேரா வின்பம் பெற்றிருப் பாரே. 5

பாரினை யணிமிகுத் தேரென வாக்கி
முப்புரம் பொருத அப்பணி சடையான்
மண்புன லனல்கால் விண்கதிர் மதியிய

மானனல் லுருவ மானவ னென்று
கூறியன் னோனைத் தேறி யறிய
மனத்தா லொணுது நினைத்தவன் புகழைச்
சொல்லச் சொல்லில வல்லவற் காண
மெய்யா லொண்ணு தையனைச் சுட்டுதற்
ககப்படா னென்று மிகப்பல நூல்கள்
அறையுந் தமிழ்த்திரு முறைதரு வள்ளால்
சுட்டுணர் விறந்த வெட்ட வெளியில்
பெருமான் றன்னைத் திருவா மலர்க்கை
விரலாற் சுட்டியின் குரலா லிசைத்தமிழ்
சாற்றினை யைய நாற்றிசை யினினும்
நீற்றொளி பரப்பி மாற்றலர்ச் செகுத்த
உன்னு லன்றி யுலகிற்
பிறரா லிச்செயல் பேசவு மரிதே. 6

அரியய னகிய பெரியரு முன்னுள்
இயக்குவா னியக்க வியங்கலை மறந்து
தம்மா லேயே இம்மா நிலமும்
மற்றைய வுலகும் நிற்றலென் றெண்ணித்
தருக்குற் றிடரா னெருக்குற் றயர்ந்தார்
பூந்தாரய் ஞான வேந்தாங் குழவிநீ
கூடன் மாறற்குப் பீடுகனி யருள
மாமறைக் காட்டிருந் தேமுற வெழுந்த
போதினில் முக்கண் மாதவ னென்னுளம்
புகுந்த வதனல் மிகுந்த நலமெனக்
காகு மென்றும் நாகிள மங்கையர்க்
கரசியார் பாலே விரைசெயுங் கொன்றை
ஆலவாய்ச் சொக்கன் மேலவா யெனதுள்
ளிருக்க வலமிகப் பெருக்கின னென்றும்
சிவனரு ளியக்க மிவணெமக் கருளினை
எல்லா மியக்கும் வல்லா யென்னைச்
சிவகதி சேர்க்கும் செந்நெறி
இயங்க வியக்குக வென்றிரந் தேனே. 7

தேனே பாலோ வானமு தோவெனச்
சுவைபெரு கிசைத்தமி ழுவைதரு பாவல!
இலக்கிய நலம்பல துலக்கிய செந்தமிழ்ச்
செய்யுள் வழங்கிய மெய்யமை நாவல!
படைத்தல் காத்தல் துடைத்தல் மறைத்தல்
அருளல் புரிமொழிப் பொருள்தரு வள்ளால்!
சொல்லும் பொருளும் மல்கிய சுவைமிகு
சித்திரச் செய்யு ளித்தரைப் புலவர்
உள்ளங் கொள்ளை கொள்ளும் படியாத்
தந்தருள் ஞான மைந்தர! வெனக்குச்
செந்தமிழ் மொழியி லெந்தநன் னூலு
மறிந்துண ரறிவு செறிந்திட வேண்டிப்
பலகா லுனதடி பரவினன்
வல்லரய்! வழங்குக வளம்பெற யானே. 8

யானென தெனுமுணர் வானதென் னுள்ளத்
தனியிடம் பற்றி கனியிருந் தாட்சி
புரிந்தெனைப் பெரிதும் வருந்துமா செய்தல்
உள்ளங் கலந்துறை கள்ளனு கியநீ
அறியா தான்போல் வறிதே யிருத்தல்
கண்டுநா டோறு மண்டிய வியப்புக்
கொண்டுள னடியேன் தண்டலை சூழ்ந்த
தோணி புரத்து மா ணுறுங் கவுணியர்
குலமணி விளக்கே! மலமறு நிலையில்
அன்றே வடியே னின்றபே ரின்பம்
பெறுவேன் செருக்குமிக் குறுவே னென்னில்
மலமற லெங்ஙனம் வலமுற லெங்ஙனம்
ஞானச் செல்வம் தானச் செல்வமாக்
கொண்டநீ யன்றித் தொண்டனு மெனக்குக்
கைகொடுப் பவரை வையகத் தெங்கும்
காணே னுதலிற் காழி
வள்ளால் மலங்கெட வாழ்வருள் வாயே. 9.

*வாய்மலர்ந் தமுது தாய்மலர்க் கினிதே*
*தந்தபா லமுது முணுஞ் செந்தமிழ்க் குரவன்*
*உருவளர் வடிவுந் திருவளர் முகமும்*
*கருணை விழிகளு மருணெறித் திருமுறை*
*இயம்புசெவ் வாயு நயம்பெறு பணிகள்*
*இலங்கிய மார்புந் துலங்குபா னிறைபொன்*
*வள்ள மேந்திய வொண்ணொளிக் கரமும்*
*பணிவோ ரென்னத் துணிவோ ரருவினை*
*அறுவினை யாக்க வுறுதிரு வடிகளும்*
*சிந்தையி னீங்காச் சிறப்பெனக் கிருப்பின்*
*பிறவிக் கடலென அறைகுநர் அறைக*
*யானே பிறப்பதற் கஞ்சேன்*
*மாறி மாறி வந்துவந் திங்கே.* 10

### வாழ்த்து

திருஞான சம்பந்தச் செல்வன் மலர்த்தாள்
இருஞாலத் தோங்க வினிது.

உ
சிவமயம்
பாலருவாயர் துணை

# பழமுதிர்சோலைப் பதிற்றுப்பத்தந்தாதி

### காப்பு:

மழமதி சூடிய வள்ளற் பிராற்கு மலைமகட்குங்
கிழமை மகனுய வேழ முகத்தவன் கீழ்விழுந்து [மால்
தொழமனம்வைத்தோர்துயரொழிப்போன்றுருள்துணைவரு
பழமுதிர் சோலைப் பதிற்றுப்பத் தந்தாதி பாடுதற்கே.

பாவலர்க ளேத்தும் பழமுதிர் சோலையினிற்
சேவலனுக் கன்போடு சேப்புதற்கு-நாவமையும்
ஆய பதிற்றுப்பத் தந்தாதி காழிநகர்
மேயபிள்ளை யாரருளால் மேல்.

## நூல்

திருமக ளருளு நாவிற் றிகழ்மக ளருளு மேவ
விருநிலத் தின்ப மெல்லா மெய்துமி னிருமை வாழ்வுந்
தருநெறி வறிந்த மக்கட் டனிப்பெரும் பேறு மார்மின்
பருவரை யனைய தோட்சேய் பழமுதிர் சோலை
[சென்றே

2

சென்றடை யாத செல்வத் திருவுடை யவனெந் நாளு
மொன்றிய வுளத்தார் நெஞ்சி லுறைதரு பொருளா
[யுள்ளான்
வென்றிவேல் கரத்துத் தாங்கும் விமலன்மா மஞ்ஞை
[யூர்வான்
குன்றுதோ றாடு வானூர் பழமுதிர் சோலைக் குன்றே

3 [ணர் தம்மை
குன்றென வுயர்ந்த திண்டோட் கொடுந்தொழி லவு
யன்றொருப தந்தந் தாண்ட வண்ணலே யருச்சுனற்காப்
பன்றிமுன் சென்றோன் மைந்த பழமுதிர் சோலை
[வாழ்வே
நன்றுவந் தடையவென்னை நயந்தருள் நல்கு வாயே

4 [வேண்டும்
வாயுனை வாழ்த்த லொன்றே மகிழ்வொடு செய்தல்
காயநின் தொண்டே வேண்டிக் கனவிலும் புரிதல்
[வேண்டு
மேயவென் மனநின் றுளே விழைந்தினி திருத்தல்
[வேண்டும்
பாய்புனற் புவியிற் பாண்டிப் பழமுதிர் சோலையேறே

KOVILUR MADALAYAM
KOVILUR-630 307
MANAGIRI VIA

5

[ளர்
ஏறினன் பிறவிப் பௌவத் திடரெனை யகன்ற துள்
தேறினனயனுமாலுந்தெளிந்தறிகிலாமைதேர்ந்தேன்
மாறின னென்னை யன்பரான் மகிழ்ந்தருண் மன்னு
[வித்தான்
பாறின மகிழப் பாறும் பழமுதிர் சோலை யானே.

6

ஆனமர் கொடிய ஞனு மாங்கவ னிடப்பான் மன்னித்
தானமர் கொடிய ளூஞ் சத்தொடு சித்தாய் நிற்ப
ஞானவா னந்த மாகு நல்லுருக் கொண்டு மேய
பானல்வா யண்ணல் வாழ்வு பழமுதிர் சோலை யாமே.

7

யாமிரு நிலத்து வாழ்வா ரெவரினுந் தவத்த ரானோர்
காமனைக் காய்ந்த முக்கட் கடவுளார் காதற் செல்வக்
கோமகனடியார்குற்றக்குணமெனக்கொள்வோனுடும்
பாமகிழ்ந் துரைத்தல் செய்தேம் பழமுதிர் சோலை
[கண்டே

8

[ஞேர்
கண்டெனு மொழியி ஞர்கள் கலவியை விரும்பியன்
வண்டெனும் விழியிற் பட்டு மயங்குதல்வாரா தின்பத்
தண்டையந் தாள்க ளெண்ணுந் தவமுற வருள்வா
[யென்றன்
பண்டைவல் வினையை யோட்டும் பழமுதிர் சோலை
[வாழ்வே

9

[முன்னை
வாழ்வினிற் றுன்பம் வாரா வகையருள் செய்வு
யூழ்வினை நுகர்ச்சிதன்னையொழித்தென்றுமொழியா
[வின்பம்
சூழ்வினை யென்னைச் சார்ந்து சுகந்தரச் செயவும்
[வேண்டும்
பாழ்வலி யவுணர்ச் செற்ற பழமுதிர் சோலைக் கோவே

10

கோவலனுகிமுன்னங்குன் றிணைக்குடையாத்தூக்குங்
காவலன் மருகன் மேலைக் கற்பக நாட்டோர் தம்மை
மேவலர்ச்செகுத்துவாழவிட்டவன்விழைவுதந்தான்
பாவலர்க் கின்ப நல்கும் பழமுதிர் சோலை நின்றே

வேறு

நின்றிருப் பாத நிழலிணை தன்றி
நீடிய பவப்பெருங் கடலி
லொன்றிநின் றுழலு முயிர்களைக் காலு
முயர்நிலை வீட்டினை யுற்று
வென்றிபெற் றேங்கல் மேவிடா வென்று
விளம்புதொன் னூலுரை யறிந்தேன்
தென்றிசைப் பாண்டிப் பழமுதிர் சோலைச்
சேயெனை யாண்டருள் செய்யே

12

செய்யவன் வலப்பாற் றிகழ்ந்தினி திருப்பத்
திருவருட் கரியசெம் மேனித்
துய்யவாட் கயற்கட் சுடரிழைத் தோகை
துலங்கிடப் பாலமர்ந் திருப்பப்
பொய்யகல் சிந்தை புகுந்துறை நீயப்
பொற்புளார்க் கிடையுவந் திருப்பா
யுய்யுமா றருளப் பழமுதிர் சோலை
யுறைதரு முருகவேன் னுறவே

13

உறவென முன்னர்ப் பிறரையா னெண்ணி
யொழிவிலாத் துயரையே யுற்றுப்
பிறவியைப் பெருக்கிப் பேதமை யடைந்தேன்
பெரியனே பழமுதிர் சோலை
யறவனே வடிவே லமலனே முன்னு
ளார்ந்தகே வலத்தின்று சகலத்

துறவரு சுத்தத் துன்னுற வொன்றே
யுண்டென வுய்ந்தன னுணர்ந்தே

14

உணர்வரு மொளியா யுரையடங் காத
வொருபெருஞ் சோதியா யுடலாற்
புணர்வுற வொண்ணுப் பொருளுமாய் நிற்கும்
புண்ணியா தண்ணறும் பைம்பூக்
துணர்மலி வளஞ்சேர் பழமுதிர் சோலைச்
சுடர்வடி வேலவுன் னருளைக்
கொணர்தர வடியேன் கூறுசெந் தமிழைக்
குழையணி செவியினிற் கொள்ளே

15

கொள்ளிட மாகக் குற்றமே பொருந்தக்
குணமறி யாதவெ னெஞ்சக்
கள்ளவான் குரங்கை யடக்கியாள் வதற்குன்
கருணையை யெளிதருள் களித்துத்
துள்ளுமா னினஞ்சேர் பழமுதிர் சோலைச்
சுடர்வடி வேலுடைச் சோதீ
வள்ளலா யடியார் வாழ்வினுக் கெய்ப்பில்
வைப்பதா மன்னுமா மணியே

16

மணிமுடி தாங்கி மாற்றலர்ச் செகுத்து
மண்ணுல கனைத்துமோர் குடைக்கீ
ழணைவுற விவிதே வாட்சிசெய் போகத்
தரசுமெய்த் திருவதா வாமோ
துணிவுடைச் சூரன் றாரகன் சிங்கன்
றோள்வலி யழித்தநின் றாள்கள்
பணிவுறுந் திருவே மெய்த்திரு வாகும்
பழமுதிர் சோலைவாழ் பவனே

17

பவப்பெருங் கடலை நீந்துவ ருனது
பதமலர் சேர்ந்துயர் பத்த

ரவப்பவ மாய கடலினை நீந்தா
தழுந்துவ ரடிதொழா தவரென்
றுவப்புற வறஞ்சொல் வள்ளுவர் கூறு
முண்மையை யுணர்ந்தடி பணிந்தேன்
தவப்பய னாகப் பழமுதிர் சோலை
தங்கிவீற் றிருக்குமெந் தாயே

18

தாயொடு தந்தை யாகியெந் நாளுஞ்
சார்ந்தெனை யகன்றிடா திருந்து
நாயினுங் கடையே னன்றியை மறந்து
நறுமலர்ச் சேவடி நணுகே
னாயினு மென்பா லன்புவைத் தின்ப
மாக்குவாய் பழமுதிர் சோலை
நாயகா தெய்வ ஞானவேற் கரத்து
நாதனே நற்றவக் கொழுந்தே

19

கொழுத்தவல் லுடலர் குற்றமே குணமாக்
கொண்டுவாழ் மிண்டர்தின் டோளர்
புழுத்தவூ னுண்ணும் வாயினர் கள்ளும்
பொருந்திடா விரையுங்கொள் புல்லர்
மழுத்தனை யுணர்த்தும் பல்லினர் பொல்லா
மனத்தவுண் மரக்களு முன்னாட்
பழுத்தவு னருள்பெற் றூரெனி லெளிதாம்
பழமுதிர் சோலையா யெனக்கே

20

எனக்கெனக் கென்ன வெழுந்தலா தொடு
மின்பமிங் கெவற்றையு நுகர்வான்
மனக்கொடும் பாவி வளைத்தெனை வருத்த
வாடினேன் பேரின்ப வள்ளால்
கனக்குழ லெயினர் மடக்கொடி கணவா
காமர்வண் பழமுதிர் சோலை

யுனக்கெடும் புன்பற் றெனத்தமி ழுரைத்தே
    னுயர்நலமுதவுவா யுவந்தே

வேறு

உவரியுடை யாவுடுத்த வுலகந் தன்னி
    லுயர்குறிஞ்சி முல்லையொடு மருத நெய்த
லெவருமனு காப்பாலை யென்ன வைந்தா
    கிருநிலத்தைப் பகுத்தவற்று ளின்ப மிந்தப்
புவனியினிற் குறிஞ்சியிலே பொலியு மென்னப்
    புகன்றதற்குப் பொற்பாருங் கடவு ணீயென்
றவனிமிசை வகுத்தவர்த மறிவுக் கொப்பொன்
    றுகுமோ பழமுதிர்கா வடியர் வாழ்வே.

22

வாழ்வாங்கு வையத்துள் வாழு வோனே
    வானுறையுந் தெய்வமென மதிக்க நிற்போன்
ஏழ்வாரி சூழ்நிலத்த னெனினு மென்ற
    வியற்புலவ னுரைகற்றே னிணங்கி யென்றுந்
தாழ்வாகுந் தன்மையொடு வாழச் சாற்றும்
    சமயநெறிகடைப்பிடித்தேன்சாரும்வாழ்வோ
ஊழ்வாயிற் புகுகின்ற துறுதி நல்கா
    யோதுபழ முதிர்சோலை யுமையொண் சேயே

23

சேய்த்திருக்கும் பொருள்கடவு ளென்று மாந்தர்
    திருவருளை யடைவதற்குச் சிந்தை செய்யார்
வாய்த்தவவர் நெஞ்சகத்தும் வாழு வாய்நீ
    வளமாய பழமுதிர்கா மன்னுங் கோவே
மாய்த்தெனது மலங்களெலாம் வண்மை யீந்து
    மறுபிறவி யடையாத வாழ்வு தந்தாள்
சாய்த்தொருமா மரந்தடிந்த வைவே லண்ணல்
    தவத்தோர்கள் தொழுமலைமேற் றங்கு வானே

24

வானகத்தே யிருந்துசிந்தா மணியு மானும்
வளரைந்து தருக்களுமென் மங்கை மாரு
மானசங்க நிதிபதும நிதியு மேவ
வாட்சிபுரி விண்ணரசு மகில மெல்லாந்
தானுதிக்கப் பண்ணுகின்ற வேதன் வாழ்வுந்
தாணியெலாங் காக்கின்ற சங்கன் வாழ்வுந்
தேனமரும் பழமுதிர்காச் செல்வா வுன்றன்
றிருத்தொண்டர் வெறுத்தொதுக்குந் திறத்த
[வன்றே

25

வன்றேள ராமவுணர் கூட்ட மெல்லா
மலாடிக்கீழ் வாழவைத்த வள்ளால் வெள்ளி
மன்றேறி யொருமாறன் மனங்க ளிக்க
வலப்பாத மெடுத்தாடு மன்னன் செல்வா
குன்றேறி யருள்புரியுங் கொற்ற வைவேற்
கோமானே பழமுதிர்காக் குமர வேளே
என்றேநா னிடர்க்கடலி லேறி மாறு
மின்பஙனி பெற்றுமகிழ்ந் திருக்கு நாளே

26

நாளாய சழிக்கின்றீர் வீணே யிந்த
நானிலத்துக் கடப்பந்தார் நயந்து வேட்குந்
தோளானின் பரங்கிரியு மலைவா யூருந்
தொழுதகுமா வினன்குடியுந் தொன்னுள் மார
வேளானை யெரித்தவற்கு மெய்ம்மை யோத
விளங்குதிரு வேரகமு பேலார் குன்று
மாளாகப் பழமுதிர்காப் பதியுங் கும்பிட்
டன்புசெயல் கடனறிவீ ரகிலத் தீரே

27

தீராத வினைப்பயனுற் றீமை யுற்றுந்
திரிந்தொருகா னன்மையுற்றுஞ் சிந்தித் துன்னை

போராது வினைவருத்த வோய்ந்து போனே
னொழியாத வினையகற்றி யொருகா ளேனும்
பேராத வீட்டின்பம் பெறுவித் தென்னைப்
பேணியருள் தந்தாள்வாய் பிழையை யென்பாற்
பாராது பெருமானே பாண்டி நாட்டுப்
பழமுதிர்காப் பதிவளரும் பரம னீயே
28

நீயேதும் பழமுதிர்கா நிமலன் றன்னை
நினையாதெப் போதுமவ நேடி நெஞ்சப்
பேயேபுன் னெறிநினைந்து கெடுகின் றுய்கற்
பேறுபெற வேண்டுமெனிற் பீடு மிக்க
சேயேநங் குலதெய்வ மென்று நாளுஞ்
சிந்தித்து வழிபாடுசெய்து தூய
வாயேமற் றவன்புகழைப் பாடு கென்று
வளம்பெருக வைத்தோங்கி வாழு வாயே
29

வாய்தந்தா யுனைவாழ்த்த வுடலந் தந்தாய்
வள்ளாலுன் னடிபணிய வண்மை மிக்க
தாயெந்தாய் விழிதந்தாய் உன்னைக் காண
வருங்காது தந்தாயுன் புகழே யாராத்
தாய்தந்த பழமுதிர்காத் தலைவா மூக்குத்
தந்தாயுன் றனைமூரலத் தக்கோ ரேத்துஞ்
சேய்தந்தா ளிம்மையினிற் செல்வங் கல்விச்
சிறப்புநனி படைத்துயருஞ் செம்மை வாழ்வே
30

வாழவகை யறியாது வருந்து நெஞ்சே
வகையுரைப்பேன்பொறுமையொடுவந்துகேணீ
வேழமடக் கன்றுசிங்க முழையுட் புக்கு
விளையாடும் பழமுதிர்காப் பதியை மேவி
யேழுபவ வினையொழிக வென்று மூழ்கி
யெழில்வெண்ணீ றணிந்துவைவே லிறைவன்
[ருள்கள்

தோழமையாற் பணிந்தெழுந்து காலந் தோறுந்
துலங்கவன்சீர் விளங்குதமிழ் சொல்லு வாயே

வேறு

வாய்ந்தவள முடையதிம் மானிடப் பிறவிமேல்
வானநாட் டவர்க ளின்பந்
தோய்ந்தினிது வாழினு மண்மிசைத் தோன்றியே
தொலைவிலா வின்ப மார்வர்
ஆய்ந்தறிஞர் கண்டமுடி பிதனையறி யாதுசில
ரந்தோ மயங்கு கின்றார்
பாய்ந்தருவி பொழிகின்ற பழமுதிர் சோலையாய்
பத்தர்கள் சித்த வாழ்வே.

32

வாழ்வோடு தாழ்விந்த வையகத் துயிர்கட்கு
வந்துறுதல் கண்டு நெஞ்சே
தாழ்வோது புன்னெறிகள் சார்ந்துநீ வாடுவது
தகுமோ வுரைத்தி மஞ்சு
சூழ்வான கங்கிழித் துயர்முடிப் பழமுதிர்
சோலையிற் றேகை யேறி
எழ்வாரி யாயவென் பிறப்பறுத் தாள்முருக
னிணையடிக ளெண்ணி யேத்தே

33

எத்தாத காளுநின் னிணையடிக ளினைமனத்
தெண்ணாத நாளு மில்லை
காத்தாளு நின்பெருங் கருணையினை வேண்டியான்
கதறுவ து கருதி லாது
கூத்தாடு வான்மைந்த னுயநீ நின்றிடிற்
குறைதவிர்ப் பவர்க ளாரோ
பூத்தாடு வான்தருப் பழமுதிர் சோலைமலை
பொலிகின்ற முருக வேளே

34

வேளென்ன வெழிலுருப் பெற்றவன் பின்புமிக
வெறுக்கத் தருந்த வுருவத்
தாளென்ன வாவதிங் கறிதிர்நீர் பேரழகை
யடையவழி யாத வழகன்
நாளென்ன கோளென்ன நமனென்ன விவரெலா
நடுங்கிநின் றேவல் கேட்பத்
தாளென்றன் மனமுறப் பழமுதிர் சோலையாள்
தலைவனைச் சாற்று வீரே

35

வீரவேல் வானவர்கள் மேவுசிறை மீட்டவரை
விண்ணுலக மெய்து வித்த
தீரவேல் மலையொன்று பொடிபடச் சென்றவேல்
சேவல்மயி லாக வன்று
சூரனு மவுணனைச் செய்தவேல் ஞானமாச்
சொல்லுமொரு சத்தி யாக
வாரமா மன்னுவேல் பழமுதிர் சோலைமலை
மன்னவன் கையில் வேலே.

36

வேலைபுடை சூழ்புவியில் மேவுதென் னுடுசெய்
மிகுதவ மெண்ணி யுன்னைக்
காலையிலு மாலையிலு மெப்போது நல்லன்பர்
கருதிவழி பாடு செய்து
மாலைமகிழ் மாமனு வைத்துவளர் நின்புகழ்
வாயினுற் பாடி வாழ்த்தி
மேலைவினை போக்குவார் பழமுதிர் சோலைமலை
வீற்றிருந் தருளும் வேளே

37

வேளையிது சென்றுவழி பட்டுநங் குறைகளை
வேண்டுதற் கேற்ற தோதான்

நாளையொருபொழுதுதான்வாய்க்குமோவென்றுகடு
நஞ்சரா வணையி னானும்
வாளையொளிர் விழிவாணி பங்கனும் வானவர்
மன்னனும் வந்து நிற்பக்
காளைபழ முதிர்சோலை முருகனெனை யன்பினாற்
காத்தன னடிமை கொண்டே.

38

கொண்டனிகர் வண்ணமால் மருகனே முருகனே
கோலமா மஞ்ஞை மீதிற்
பெண்டிரிரு வோருடன் மன்னியெனை யாட்கொண்ட
பிஞ்ஞகா பெரிய தேவே
தண்டலைகள் சூழ்ந்தபழ முதிர்சோலை வாழ்வுடைத்
தத்துவா தீத பற்றி
மிண்டுமல மெனையகல வண்டார சாயவுன்
மெல்லடி யிறைஞ்சு வேனே.

39

வேனிலா னைந்துகணை மேற்பாய நைந்துமிக
மெலிவதும் வெள்ளை நகையார்
வானிலா மதிநுதன் மங்கையர்க ளுறவுக்கு
வாடுவது மழகோ சொலாய்
ஆனிலா ரைந்தாடி மன்றுடு வான்மக
னடியிணைகள் கருதி மனமே
தேனிலா வியவளப் பழமுதிர் சோலைமலை
சிந்தித்த லின்ப மாமே

40

மாமேவு மார்பனின் வாழ்வுநிதி பதிவாழ்வு
மகவானின் வாழ்வு மற்றைப்
பூமேவு நான்முகனின் வாழ்வுநான் வேண்டிலேன்
புனிதநின் செய்ய தாள்கள்

மீமேவு மன்பையே வேண்டுவ னெனச்சொன்ன
வீரனுரை தேறி விண்ணிற்
சுாமேவு பழமுதிர் சோலைமலை காதல்செய்
கடவுளை யிரத்தல் கடனே.

வேறு

கடலிற் பெருகுந் திரையை யெண்ணிக் காண
லொருகா லாமெனினு
முடலிற் பொருந்தி யானடைந்த வோயாப்
பிறவிக் கணக்குரைக்க
மடலிற் பொலியு மராமலர்த்தார் மார்பா
தொல்லை வடிவேலோ
யடலிற் றிகழு மயிலோனே யாகா
தறுப்பா யரும்பவமே.

42

அரும்பை நிகருஞ் சரியைநெறி யலரை
யொவ்வுங் கிரியைநெறி
விரும்பு காயாம் யோகநெறி மேலாங்
கனியாம் ஞானநெறி
இரும்பு மனத்தேன் கொண்டொழுக வெண்ணு
திருப்பி னெவ்வாறே
சுரும்பு முரலும் பழமுதிர்காத் தொல்லோ
னருளிற் றேய்வதுவே.

43

தோய்ந்து நம்மோ டுடனுவன் றேயா
திருந்து வேறுவன்
வாய்ந்து கலந்தோன் றுவனென வல்லோ
ருரைப்பர் மதித்துன்னைத்
தேய்ந்த மதியை வேணிகொளுஞ் சிவனர்
மகிழுந் திருமுருகா
பாய்ந்த வருவிப் பழமுதிர்காப் பரமா
நின்சீர் பகர்வரிதே

44

பகலோ னொளியாற் புறவிருளைப் பறிப்பன்
பாண்டிப் பழமுதிர்காத்
தகவோ னுய வாறுமுகச் சாமி
நீநின் னருளொளியால்
மிகவா மெங்க ளாணவப்பேர் வெய்ய
விருளைப் பறித்தோட்டித்
தகவா ருனது திருவடியிற் சார்வித்
தின்பந் தருவாயே.

45

தருவான் பிறரை வேண்டாமற் றலைவ
னீயென் றறியாம
லுருவாம் பிறவி தொறும்பேயை யூத்தைப்
பிசாசை யொழியாது
கருவார் புன்மைச் சிறுதெய்வ கணங்கள்
தம்மைக் கைதொழுதேன்
திருவார் வண்மைப் பழமுதிர்காச் செல்வா
வின்று தெளிந்தேனே.

46

தேனைத் தினையை யன்போடு சேர்த்துக்
கொடுத்த திருவள்ளி
மானை மகிழ்ந்து மணங்கொண்ட வள்ளால்
மகவான் றருதெய்வ
யானை யிருக்க வேனையொரு மானை
யணைத லழகாமோ
வானை மருவும் பழமுதிர்கா வடிவேற்
கரத்து மறையவனே

47

மறையா லுணர மாட்டாத வளஞ்சே
ரிளஞ்சேய் மன்னவனீ

கறையாற் பெருகி நலம்புணராக் கடையே
னுளத்தைக் காதலித்து
மூறையா லுறையும் பரிசென்னே முருகா
முதிரா முழுமுதலே
சிறையார் மயிலாய் பழமுதிர்காச் செல்வா
வினையைத் தீர்ப்பவனே

48

தீராப் பிணியும் பழவினையுந் தீர்த்துச்
சிந்தை நிறைவருளி
வாராச் செல்வ வாழ்வினொடு மணமு
மகவு மகிழ்ந்தளித்துப்
பேரா ரிசையு மீந்திம்மைப் பேறு
பெரிது நல்கிநமை
நீரா ருவிப் பழமுதிர்கா நிமல
னுள்வா னிசமிதுவே

49

துவர்வாய் மடந்தை மார்கலவித் தோயம்
படிந்து துணையாக
விவர்வார் முலைக்குன் றினில்வழுக்கி யிளைத்துச்
சுழிப்புன் குழிவீழ்வ
தெவனே வேழை மடநெஞ்சே விறைவன்
முருக னறுமுகவன்
சிவனுர் குமரன் பழமுதிர்காத் தேடிப்
பணிதல் சிறப்பாமே.

50

பாமே வியசெந் தமிழுரைக்கப் படித்தாய்
வாழ்விற் பயன்பெருக
நீமே லலைத லெற்றுக்கோ நெஞ்சே
யுனக்கு நிகழ்த்துவேன்

பூமே லவனை காற்றலையும் புடைத்த
கோமான் பழமுதிர்கற்
காமேற் கருணை மழைபொழிந்து கண்போற்
காப்பான் கருதுவையே.

வே று

கருவே புகுந்து தடுமாறு மென்பாற் கருத்துவைத்து
திருவே மறவிடச் செய்வதென் ருேநறுஞ் செந்தமிழி
ஞருவே யருவே பழமுதிர் சோலை யுறைபவனே
செருவேல் கரம்படி சேவக னேவினை தீர்ப்பவனே

52

வன்னெஞ்சன்கள்ளன்மனவலியானெற்குவாழ்வுதந்து
கன்னெஞ் சுருக்கிக் கருணையி னூற்கலந்தாண்டு
[கொண்டான்
சின்னஞ் சிறியவன் மாமயி லேறிய தேவரிறை
தென்னப்பழமுதிர்சோலையில்வாழுஞ்செழுஞ்சுடரே.

53

சுடருரு வாய துணையைப் பழமுதிர் சோலையனை
இடர்கெடுத்தாண்ட விறைவனையித்தரைமக்களுக்குச்
சடலமு தாகுங் கடவுளைக் கற்றவ ருள்ளமுறத்
தொடரிளஞ் சேயயான் ருேட்டுத் தொலைத்தனன்
[ருேல்வினையே

54

தொல்லைவினையாற்ருேடரும்பிறவித்துயர்க்கடலாழ்ந்
தெல்லை யிலாத்துன்ப மெய்தி யிளைத்தன னிப்புவியிற்
றில்லை நடம்புரி சிவனன் பெற்ற சிவக்களிறே
யொல்லை யருள்செய் பழமுதிர் சோலை யுறைபவனே

55

உறைத்துச்சிறுதெய்வவழிபாடுஞற்றியுவர்ப்படைந்தே
னிறைத்துப் பயன்றரு தெய்வக் குழவி நினதுபதங்

கறைத்தகருத்திற்பதித்துக்கடைக்கட்கருணைநல்காய்
துறைத்தமிழ் செவ்வே வளரும் பழமுதிர் சோலை
[யனே

56
[னைத்துப்
அன்னையொத் தேயெனக் கன்புசெய் வாயுய ரத்த
பின்னுமென் னுள்ளத்தறியாமையோட்டிப்பெரிதறிவு
மன்னியா னேங்குநல் வாழ்வருள் வாய்வடி வேல்
[பிடித்தென்
சென்னியின் மேவிப் பழமுதிர் சோலைவாழ் சேயவனே

57
அவனு மவளு மதுவெனச் சுட்டி யறிகின்றவிப்
புவனந் தனைக்கண் டிறையுண்மை தேறெனும் பொன்
[மொழியால்
சிவனெந்தை மைந்தனம் பழமுதிர் சோலையிற் செல்
[வர்தொழுந்
தவனெம் பிரான்பரஞ் சாற்றினர் ஞானத் தகுதியரே

58
அரவே நதியே மதியே பிறையே யவைவிருப் பி
யிரவே நடம்புரி யிறையவன் மைந்த னென நிடத்துக்
கரவே புரிந்தென்ற னெஞ்சங் கவர்கள்வன் கார்
[மிடைந்து
விரவேர் பழமுதிர் சோலையின் மேவிய வித்தகனே

59
வித்தாகி மேலைப் பிறவியை நல்கும் வினையினையே
அத்தா பழமுதிர் சோலையி லாண்டவ வாற்றுவனேல்
முத்தா வுனது திருவடிப் பேரின்ப முத்தியினை
யெத்தா லடைவே னிரங்குவ துன்கட னேற்றருளே.

60
அருளாதொழிந்தனையேயுன்கருணைக்கழகதுவோ
மருளார்மனத்துமதியிலியேனென்றுவான்மறையின்

பொருளாக மன்னிப் பழமுதிர் சோலையிற் புக்கிருந்த
அருளாள நன்றே யறிந்தும் பெருந்திற லாண்டவனே

வேறு

ஆண்ட நின்பதத் தன்பு பொருந்திலே
னீண்டு புன்னெறி யெய்தி யிளைக்கின்றேன்
பாண்டி நாட்டிற் பழமுதிர் சோலையாய்
வேண்டி னேன்மெய் விளங்கு நெறியையே

62

ஐய வேண்டு மடியர் மனத்துயர்
நைய வின்ப நனியருள் நாயக
பைய வேனும் பழமுதிர் சோலைவேற்
கைய வெற்குக் கருணை புரிவையே.

63

புரமெ ரித்துப் புகழ்பெறு வான்மகன்
கரமு கற்செற்ற கைம்முகன் பின்வந்தோன்
பரம னெங்கள் பழமுதிர் சோலையைச்
சிரமு நெஞ்சமுஞ் சேரத் தொழுமினே

64

மின்னை யொத்து விலகுபொய் வாழ்க்கையை
நன்னர் நெஞ்சமே நாளு நயக்கின்றாய்
பன்னு சீர்த்திப் பழமுதிர் சோலையான்
தன்னை யேத்திச் சரண்டலைக் கொள்வையே

65

கொள்ளை யின்பங் குலவு குமரன்றாள்
உள்ளு வாரை யுவக்குந் திருமகள்
பள்ள நீர்பாய் பழமுதிர் சோலையில்
வள்ள லார்த மலர்த்தாள் வணங்குவாம்

66

வணங்கு மன்பர்க்கு மாநல நல்குவான்
பிணங்கு வாரையும் பேணி யருளுவான்

பணங்கொ டோரகைப் பழமுதிர் சோலையன்
கணங்க ளேத்துங் கழன்மலர்க் காலனே

67

கால காலன் கருத்துறை கண்மணி
மேலை நாளலை வேலையில் வேல்விடு
பால னெங்கள் பழமுதிர் சோலையிற்
கோல மாமயிற் கொற்றவற் போற்றுவாம்

68

போற்றி யென்று புரந்தரன் மாலயன்
சாற்றி நின்றருள் சாருவர் சார்விலர்ப்
பாற்று வேல்கொள் பழமுதிர் சோலையன்
ஆற்று கென்றெனை யாள்வது திண்ணமே-

69

திண்ண னார்க்குத் திருவருள் செய்தவன்
கண்ண னார்மகிழ் காதல் மருமகன்
பண்ணை சூழும் பழமுதிர் சோலையி
லண்ண லாரடிக் கன்புசெய் வாமரோ

70

வாம மேவு மலைமகள் மைந்தனார்
சேம வேணி திகழ்கங்கை செல்வனார்
பாம னச்சும் பழமுதிர் சோலையி
னும வேற்கர நாயக நம்பியே

வேறு

நம்பியைத் தனையுளார் நாடொறும் வழிபடுந்
தம்பிரா னென்னையுந் தயவினு லாண்டவன்
பைம்பொழில் சூழ்தரும் பழமுதிர் சோலையுட்
கொம்பனு ரிருவரைக் கூடிய குமரனே

72

மாமிற னவத்தெழின் மயிலொடு சேவலா
வாமுன முறுமிறை மாதவத் தோர்தொழும்

பாமுய ரிசைமிகும் பழமுதிர் சோலையுட்
புரமெரி யரன்மகிழ் புகழ்வளர் புனிதனே

73

தனையொரு பொருவறு தனிமுத லெயினர்கள்
மனையினில் வளர்கொடி மனமகிழ் வொடுதரு
தினையினை யமுதுகொள் திருவின னவல்பெறப்
பனைநல மீவனூர் பழமுதிர் சோலையே

74

சோலையின் மண்டிய சுரும்பினம் பண்செயச்
சேலைமா னுங்கணூர் திருமுறை யோதிடக்
காலையு மாலையுங் கவின்மிகு பழமுதிர்
சோலையிற் சேய்பதந் தொழவினை தேயுமே

75

தேய்மதிச் சடையினன் றிருமுக மைந்தொடு
தாய்மலை மகள்முகந் தன்னையுங் கொண்டருள்
பாய்முக மாறுடைப் பகவனு வந்தவன்
தோய்புனற் பழமுதிர் சோலையிற் செல்வனே

76

செல்லுரிஞ் சும்பொழில் திகழ்தரு பழமுதிர்
நல்லதண் சோலையி னம்பியை நாதமும்
வல்லநா தாந்தமு மறைகளுங் காணுறைத்
தொல்லையெத் தலைவனைத் தொழநலந் தொடருமே

77

உமையொரு கூறுடை யொருமுதல் மகனென
யிமையவர் பதியென வியம்புவா ரென்னினு
நமையுடை யவன்முத னடுவொடு கடையிலான்
சுமைமலர்ப் பழமுதிர் சோலையிற் சோதியே

78

சோதியாய்ப் பழமுதிர் சோலையின் மேவிய
வாதியா மிறைவ னறுமுகங் கொடுவரு

நீதியா னன்னெறி நிறுத்துவ னெஞ்சமே
வாதியா வல்வினை வருந்துத லொழிவையே

79

ஒழிவிலாப் பிறவிவா னுவரியாழ்ந் தோய்ந்தன
னழிவிலாப் பேறெனக் கருளியா ளண்ணலே
பழியிலாப் பெரியர்சேர் பழமுதிர் சோலையில்
விழியிலார் கருணையாய் விண்ணவர்க் கண்ணலே

80

கண்ண னும் வேத னுங் காணுைக் கடவுணீ
மண்ணகத் தேயெற்கும் வாழ்வுதந் தருளினய்
பண்ணைசூழ் பெருவளப் பழமுதிர் சோலையென்
கண்ணகத் தேயுறை கற்பக மாகியே

வே று

ஏதுநலம் புரியேனை யீர்த்தாண்டு கொண்டனைநீ
தீதுநலந் தெரிந்திருந்துந் திருவோங்கும் பழமுதிர்கா
மீதுவளர் பெருமானே வினையேனு லொருகாலும்
யாதுநல மிலையென்ன வறிந்திருந்து மாண்டவனே

82

ஆண்டவனே யாறுமுகத் தம்மானே யடியரிடர்ப்
பூண்டையொழித் தருள்புரியும் புண்ணியனே
[வானேங்கி
நீண்டதருமிடைக்தபொழினெருங்குபழமுதிர்சோலை
யாண்டகையே யெனவுரைப்பார்க் கவலங்க ளடை
[யாவே

83

வேயனைய தோளுமையாள் விரும்புசே யெனவன்புத்
தாயனையார் வாழ்வோங்கித் தங்குபழ முதிர்சோலை
நாயகநின் றனையுரைப்பார் நல்லுண்மை யறிவின்ப
மாயவுருப் படைத்தாதி யந்தமுரு வமைவென்னே

84

அமைத்தகரத் தாலுயிர்கட் கச்சத்தை யகல்வித்துத்
தமைத்தாமே யறியுநெறி சார்வித்துத் தன்னடைந்
[தார்க்
கிமைப்பளவி லின்புதரு மெழின்மேய பழமுதிர்கா
நமைப்பேணு மறுமுசனை நாடோறு நினைநெஞ்சே

85

நெஞ்சேயுன் பாலிரந்தே னீமரு திசைவாய்செம்
பஞ்சாய வடிமடவார் பங்கனுயர் பழமுதிர்கா
மஞ்சாரு மயிலேறு மணவாளன் மலர்ப்பதங்கள்
எஞ்சாதோர் நாளிலொரு பொழுதேனு மெண்ணு
[வையே

86 [குணமில்லா
எண்ணுதற்கோர் குறியில்லா னியம்புதற்கோர்
னண்ணுதற்கோர் கோலமிலா னங்கள்பழமுதிர்
[சோலைப்
புண்ணியனுயி னுநப் மைப்புரப்பதற்குமனங்கொண்டு
வண்ணமிகு வடிவேற்று வந்தருள்வன் வாய்மையிதே

87

மையுலா மலர்ச்சோலை வளமோங்கும் பழமுதிர்காத்
தையலா ரிருவருடைத் தனிமுதலை மயிலேறிக்
சையிலார் வேல்பிடித்த சற்பகத்தைக் கைதொழுதெம்
மையனே யெனவரற்றி யசப்படித லறிவாமே

88

அறிவானு மறிபொருளு மறிவிக்குந் தலைவனுமாய்ச்
செறிவானேபழமுதிர்காத்திகழ்வானேயென்வினைவே
ரறிவானே மெய்யரினத் திருப்பானே பொய்யர்மனம்
பிறிவானே நின்னருளைப் பெற்றநான் பெரியவனே

89

பெரியவர்க ளுள்ளத்துப் பிறங்கியொளிர் பெருமானை
அரியதன தருளடியர்க் கெளியதென வளிப்பானைக்
கரியகுழ லவர்மிடைந்து கழல்பரவும் பழமுதிர்கா
வுரியவனைத் தொழவந்த வுயர்பிறப்பை வணங்குவாம்

90

வண்ணமலர்க் கருங்கூந்தன் மடக்கொடியை மணப்ப [தனுக்
கெண்ணமொன்றே போதியதா யிருக்கவொரு [வேடுவனைத்
தண்ணறும்பூந் தருவாகத் தளர்ந்தகிழ வுருவினனு
நண்ணியதேன் பழமுதிர்கா நலங்கிளரும் பெருமானே

வேறு

பெரும மாமயி லேறிய பிஞ்ஞக வுனது
மரும லர்ப்பத மன்றிமற் றென்றையு மறியேன்
பரும ணிக்குலம் பயில்புனற் பழமுதிர் சோலைத்
திரும கட்கொரு மருகனைத் திகழ்தரு சேயே

92

சேய னல்லவர் தேடுறி னல்லவர் தேடி
யை வண்மைய னருந்தமி ழுரைப்பவர் நெஞ்ச
மேய செம்மையன் வெற்புறை குறுமுனிக் காசான்
றிய தீர்ப்பனம் பழமுதிர் சோலையைச் சேர்ந்தே

93

சேர்ந்த வாணவ விருளினை யகன்றொளி திகழ
வார்ந்த மாயையைக் கன்மமா மலத்தினை யளித்தாய்
சார்ந்த வர்க்கருள் பழமுதிர் சோலைவாழ் தலைவா
கூர்ந்த வேற்கரக் கொற்றவா முற்றுமெற் குறியே

94

குறிக ளும்மடை யாளமுங் கோயிலுங் கொண்டு
நெறிய லாநெறி நிற்பவர்க் கறிவுற நிகழ்த்தச்

செறியும் பைந்தரு சேர்பொழிற் பழமுதிர் சோலை
வெறிகொள் வேலனுர் விளங்குவர் பயன்பெறு வீரே

95

வீர மிக்குயர் விண்ணவர்க் கிடுக்கணே விளைத்த
சூரனுதியோர்த்துணித்தவைவேலுடைத்தோன்றல்
பார மாகிய வல்வினைப் பற்றறுத் தென்பா
லீர் மார்பவன் பழமுதிர் சோலைவா ழிறையே

96

இறைவன் மாதவ ரேத்தவண் பழமுதிர் சோலை
யுறைவ னுக்கலு மளித்தலு மொழித்தலு முலையா
முறையிலாற்றிமேன்மறைத்தலுமருளலுமுடித்துக்
கறையி லாதுயிர் கதியுறக் காணுவன் கனிந்தே

97

கனியை வேண்டிநீ காசினி தனைவலம் வந்தும்
பனிவெண் மாமதிப் பரமனுர் தனைவலம் வந்த
இனிய மோதக விபமுகத் தேந்தலுக் கிந்தார்
முனிவ னுயினை பழமுதிர் சோலைவாழ் முதலே

98

தலைவ னுகிய தத்துவா தீதனைச் சார்ந்தோர்
உலைவி லாதபே றுறவரு ளொருவனை யுண்மை
நிலையி லாதவர் நெஞ்சக நீங்கிமெய் யன்பு
வலையி லாவனைப் பழமுதிர் சோலையில் வழுத்தே

99

வழுத்து வாரகம் வாழுவன் மற்றவர் தமக்கும்
பழுத்த பேரருள் பாலிப்பன் பழமுதிர் சோலை
அழுத்த மாயதன் னமர்விட மாக்குவ னவத்தாற்
கொழுத்தமாக்களைக்கொன்றவைவேலுடைக்குகனே

100

கனமி குந்ததென் பரங்கிரி செந்திலைக் கருதிப்
புனமி குந்தவா வினன்குடி யேரகம் பொருந்தித்

*தனமி குந்துயர் தடவரை பழமுதிர் தண்காத்*
*தினம கிழ்ந்துறை சேய்பதந் தொழவருந் திருவே.*

வாழ்த்து

ஆறுபடை வீட்டி லமரு மறுமுகனுர்
வீறு தரும்பதத்தை மேதினியில்-பேறுபெற
வேண்டித் தொழுவார் விளங்கி நனிவாழ்க
காண்டற் கினிமைமிகக் கண்டு

உ
சிவமயம்
பாலருவாயர் துணை

# ஞானபுரீசுவரசுவாமிபதிகம்

காப்பு:

வான மதிதவழு மாடத் தருமைநகர்
ஞான புரீசர் நயக்கவென–யானியம்புஞ்
செஞ்சொற் பதிகஞ் சிறக்கத் துணைபுரியும்
பஞ்சக் கரத்தான் பதம்.

பயன்

விண்முகமா மதிவேணி விமலனேமை யாண்டருள
மண்முகமா கியதருமை வளநகரின் மானிடனுச்
சண்முகமாந் திருநாமந் தழைத்தன்பு சார்ந்தோளிர்வான்
புண்முகமாம் புவனத்தீர் போந்துநலம் பெறுவீரே.

## நூல்

பூமன்னு நான்முக னன்ன வுருக்கொடு போந்துவின்
[ணில்
மாமன்னு மாதவ னேன வுருக்கொடு வந்துமண்ணில்
தேமன்னு வீமுடி சேவடி தேடியுந் தேறரியான்
காமன் றருமையில் ஞான புரீசனங் கண்ணுதலே

2

வில்லா லடித்த விசயற்கு நெஞ்சு விரும்பியென் றுங்
கல்லா லடித்த வொருவற்கும் வேத்திரங் கண்டடித்த
மல்லார் புயத்து வழுதிக்கும் வாழ்வு மகிழ்ந்தளித்தான்
செல்லார் தருமையில் ஞான புரீசனஞ் சேயவனே

3

உருவாய் விளங்கி யுதவுவன் சில்லோர்க் குதுகரந்த
அருவாய் விளங்கி யருளுவன் சிற்சிலர்க் காமிதன் றி
யுருவருவாகியொருபுறம்பேரின்பமூட்டல்செய்வான்
திருவார் தருமையில் ஞான புரீசச் சிவக்கொழுந்தே

4

பூமக னாகி யுலகெலாந் தோற்றுவன் பொன்மகிழ்ந்த
மாமக னாகி நிலைபெறக் காப்பனல் வாழ்வுதருஞ்
சேமக னாகி யழித்தலுஞ் செய்வன் றிருவருளே
ஆமந் தருமையில் ஞான புரீசனம் ஆண்டவனே

5 [றுரைக்கும்

இச்சையு ஞானமோ டெண்ணுங் கிரியையு மென்
விச்சைகொள்மூவகைச்சத்தியைக்கொண்டுவியனுலக
மெச்சும் பரம்பொரு ளாகி விளங்குவன் மெய்த்தவத்
[தோர்
நச்சுந் தருமையில் ஞான புரீசனன் னாயகனே

6

வணங்கத்தலைதந்துவாழ்த்தநன்னாத்தந்துமாதவத்தி
லிணங்க வுடறந் துருவணி காண விருவிழியீந்

R65



தணங்கொரு பான்மன்ன வீற்றிருந் தென்னைவந் [தாண்டுகொண்டான்
கணங்கொள் தருமையில் ஞான புரீசனங் கற்பகமே

7

முன்னைப் பிறவியி லென்ன பெருந்தவ முற்றுவித் [தேன்
பின்னைப் பிறவியிற் பேறுதந் தாட்கொண்ட பெற்றி [யென்னே
உன்னைப் பெரியவ னென்றெண்ணு மேலா முறுதி [தந்தாய்
சென்னெற் றருமையில் ஞானபுரீசனற் சிற்பரனே

8

திருக்கயி லாய பரம்பரை வந்து சிறந்தருளைப்
பெருக்குங் குரவர் சிகாமணி ஞானம் பிறங்குமணி
யெருக்கம் புனைமணி யெம்மாசி லாமணி யேத்துமணி
தருக்கொள் தருமையில் ஞான புரீசத் தவமணியே

9

செந்திற்குமரன் றிருவருள்பெற்றுச்சிறந்துநின்றோன்
முந்துந் தவத்துக் குமர குருபர மூதறிஞன்
சிந்தை யிருத்துங் குருவாகி மன்னிச் சிவந்தருவான்
எந்தை தருமையில் ஞான புரீச விறையவனே

10

தருமைப் பதியினில் வாழ்சண் முகஞான சம்பந்தகங்
குருமெய்ப் பரிவுடன் போற்ற வளருவன் கும்பிடு [வோர்க்
கிருமைப் பெருவினை நீக்கி யிணையடி யீந்துவப்பன்
அருமைத் தருமையில் ஞான புரீச வருட்கடலே.

KOVILOOR MADALAYAM

### வாழ்த்து

தருமைப் பதிவாழ்க சண்முகமெய்ஞ் ஞான
அருமைக் குருவாழ்க வன்பிற்-பெருமைபெறு
சைவந் தமிழ்வாழ்க சான்றோர் நனிவாழ்க
தெய்வந் தெளிந்தோர் சிறந்து

நலம் பெருகுக.

செட்டிநாடு அச்சகம்
தேவகோட்டை
27-12-56